# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு ஆடி மாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 29-ம் இலக்கம்


## கல்கத்தா நகரின் தரும சீமாட்டியான கன்னிகாரத்தினம் — தெரேஸ்தாயார்

கல்கத்தாநகரின் மத்தியிலே, பிரபல்யம்பெற்ற காளிகோவிலை அடுத்துள்ள புராதனஇந்துயாத்திரைச் சத்திரம்ஒன்றிலே ஆண்களும், பெண்களுமாக 120மானிடசென்மங்கள் உயிருக்காகப் போராடி உயிர்நீத்துக் கொண்டிருக்கும் உருக்கமான காட்சி எவர்மனத்தையுமே உருக்கவல்ல ஓர்பரிதாபகாட்சியாகும். மைபூசப்பெற்ற தனிப்பலகைகளிலே நீட்டிநிமிர்ந்தபடியே இவர்களின் நலிந்துமெலிந்தஉடல்கள் அந்தச் சத்திரமண்டபத்தின் இருமருங்கும் வரிசையாக நிரைப்படுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. பின்புறத்திலே மறைவுதிரைஒன்று அப்போதுதானே இறந்துபோன ஓர்மனிதசடலத்தின் கால்களை வெளிப்புறமாகக் காண்பிக்கின்றது. ஓர்மூலையிலே 18வயதுடைய இளைஞன்ஒருவன் ஒட்டியுலர்ந்தஉடலோடு சுருண்டு துவண்டு கீழே குந்திக்கொண்டு செத்தும்சாகாதவனாய்க் காட்சியளிக்கின்றான். காசம்என்னும் கொடியநோயாலும், போஷிப்புக் குறைவாலும் அவன்வாடிவதங்கிப் பெரிதும்இரங்கத்தக்க பரிதாபநிலையிலே காணப்படுகின்றான்.

உயிருக்காகப் போராடிக்கொண்டு மரிக்குந்தறுவாயிலுள்ள மனிதசென்மங்களே இந்தச்சத்திரத்தில் வரவேற்கப்படுகின்றார்கள். இறந்தவர்கள் காலிசெய்யும்இடங்கள் புதிய அகதிகள் — அந்தரித்தோரால் உடனேதானே நிரப்பப்படுகின்றன. குணமடைந்தவர்களும், தங்கள்இடங்களைச் சிக்கரம் காலிசெய்து வெளியேறவேண்டும். ஏனெனில், துர்ப்பாக்கியரான எத்தனையோ ஆன்மாக்கள் இன்னும்அங்கு வெளியிலே காத்துக்கிடக்கிறார்கள். சங். தாயார் தெரேசாவின் இந்தவிடுதியில் எப்பொழுதும்ஏழைகளே வேண்டப்படுகின்றனர்.

அசுசியும், அரோசிகமும்கலந்து துர்க்கந்தம்வீசும் இடமாகத் தோன்றவேண்டிய அந்தஇடமானது அங்குசேவைசெய்யும் அரியகன்னியாஸ்திரிகளின் அன்புக்கரம்—சேவையே இலட்சியமாய்க்கொண்ட அவர்களது கசிவிரக்கம் — அங்குசெல்லும் ஏழைகளை இன்பபுரிக்கு இட்டுச்செல்லுகின்றது. அமைதியும், சுத்தமும், ரம்மியமான விசிறிகளும் அவர்களுக்கு இன்பமளிக்கும். ஆறுதல்கொடுக்கும். அன்பும்,ஆதரவும் நிலவி அனைவரையும் சாந்திப்படுத்தும். அந்தகாரத்தில் அமிழ்ந்திருந்தவர்கள் சமாதானமடைவார்கள். கல்கத்தாநகரின் சேரிகளில்வதியும் நூற்றுக்கணக்கானவர்களின் உறைவிடமாய் அதுஇருக்கிறது. அன்பேஉருவான இந்த அல்பானிய கன்னிகாதாயார் இல்லாவிட்டால்—அவரது பரோபகாரசிந்தை இல்லாவிட்டால்— இவர்களில்அநேகர் கல்கத்தாநகரின் தகிக்கும்வெயிலிலே, வீதிஓரங்களிலே, சாக்கடைகளிலே இல்லிடமின்றிப் பட்டினியால் வாடித் தேடுவாரற்றுப் பரிதாபமாய்க் கைவிடப்பட்டுத் தவிப்பார்கள்.

சங். தாயார் தெரேசாவின் விடுதியிலிருந்து நாள்தோறும் புறப்படும் மோட்டார்ரதம் கல்கத்தாவின் வீதிகள்தோறும், மூலைமுடக்குகள்தோறும் சென்று என்பும்தோலுமாய் உருவிழந்து, குற்றுயிராய்க்கிடந்து நலிவுறும் மனிதப்பொதிகளைஏற்றிச்சுமந்து வரும். விடுதிக்கு அவர்கள் கொண்டுவரப்பட்டதும் அங்குள்ளகன்னியாஸ்திரிகள் அவர்களைக் கழுவித்துடைத்து, அன்னவஸ்திரம்அளித்து, வைத்திய உதவிசெய்து பராமரிப்பார்கள். படுத்துறங்கப் படுக்கை, மேலை

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

தமிழாக்கம் : எஸ். எம். ஜே.

## துன்பத்தில் இன்பம் கண்டாள்

[இச்சம்பவம் லண்டன்நகரிலே கத்தோலிக்க ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த குருப்பிரசாதிகளுக்கு ஆஸ்பத்திரி விசாரணைக் குரவரால் எடுத்துக் கூறப்பட்டது. இந்த நிலையம் கத்தோலிக்க சமயத்தைப் பற்றி லௌகிக பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்து வருகின்றது.]

'கான்ஸர்' எனப்படும் புற்றுநோய்கண்டுஉயிர்போய்க்கொண்டிருந்த ஓர்பெண் நோயாளியுடைய வேண்டுகோளின்பேரில் ஆஸ்பத்திரிக்கு வரும்படியாக நான் ஓர்நாள் அழைக்கப்பட்டேன். அவளுடையநிலைமை முற்றாகவே நம்பிக்கையற்றதென்றும், சிகிச்சைசெய்வது பயனற்றதென்றும் நான்அவளைக் காணுமுன்னரே அந்தவாட்டைக் கண்காணிக்கும்தாதி என்னிடம் தெரிவித்தாள்,

நோய்வாய்ப்பட்டிருந்த அப்பெண்ணை நான்சந்தித்தபோது, அவள்என்னை அன்புடன்விழித்து, "நான் கத்தோலிக்கசமயத்தில்சேர ஆசிக்கின்றேன்: இந்த ஆஸ்பத்திரிக்கு நான்வந்தபோதே கத்தோலிக்க சமயத்தை ஆராய்ச்சிசெய்து படித்தறியத்தொடங்கிவிட்டேன்" எனக்கூறினாள்.

"நல்லது, நான் சிலகாரியங்களை உனக்கு சொல்லித்தந்து இன்று சாயந்தரமே உனக்கு ஞானஸ்நானம் அருளுவேன்" என்று நான் சொன்னேன்.

"அவ்வளவுதீவிரமாக என்னத்துக்கு? நான் சாகப்போகிறேனென்று தாங்கள் எண்ணுகிறீர்களாக்கும்; அப்படியல்லவா? ஆனால், ஓர்குருவானவர் என்னைக் காணவந்தால் நான் கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்துகொள்வேனென இன்றுகாலை நான் ஓர் பிரதிக்கினை செய்துகொண்டேன்; அதனைச்சரிவர நிறைவேற்றிவைக்கத் தேவன் எனக்குக் காலநேரம்தருவாரென நான் இப்போது அறிவேன்" என்று அவள் பதிலளித்தாள்.

"ஒருசில தினங்களில் உனக்கு நான் ஞானஸ்நானம் அருளுவேனென்று சொல்லித் தாமதஞ் செய்தேன். அவளும் சற்றே குணமடைந்துகொண்டு வந்தாள்.

"அதன்மேல் எல்லோருமே அதிசயிக்கும்படியாக ஒருசொற்பகாலத்தில் ஆஸ்பத்திரியைவிட்டு அவள் வெளியேறக்கூடியவளானாள்.

"நானும் அவள்வசிக்கும் இடத்துப் பங்குக்குருவானவரை அவள் சந்திப்பதற்கான ஒழுங்கைச் செய்துவைத்தேன். அவளும்வேதகாரியங்கள் சரிவரக் கற்பிக்கப்பட்டுத் திருச்சபையில் சேர்க்கப்பட்டாள்.

"மூன்று அல்லது நான்கு மாதங்களின்பின் அவள்திரும்பவும் ஆஸ்பத்திரிக்குவந்தாள்.

"நீ இங்கே என்னசெய்துகொண்டிருக்கிறாய்? என்று நான் அவளைக்கேட்டேன். 'நான் சாகிறதற்குத் திரும்பவும் வந்திருக்கிறேன்; இப்போது நான் செய்யவேண்டியதெல்லாம் செய்தாகிவிட்டது' என்று அதிகம் சாந்தமாக அவள் விடைபகர்ந்தாள்.

"என்னுடையதாயார் கத்தோலிக்கசமயத்தில் சேர்ந்துவிட்டார்கள். எனது அத்தியந்தசிநேகிதியும், கத்தோலிக்க சமயமல்லாத மற்றோர்சமயகுருவாகிறதற்குப் படித்துக்கொண்டிருந்த அவள் நாயகரும் கத்தோலிக்கதிருச்சபையில் சேருவதற்கு ஆயத்தமாய் வேதசத்தியங்களைப் படித்துக்கொண்டுவருகிறார்கள்.

"நான்பட்ட துன்பவருத்தத்தின்பலன் இதுதான். இந்தத் துன்பவருத்தம் அவர்களுக்கு இவற்றைச் செய்துவிட்டது.

"பின்னர்அவள் பாடுவேதனை பற்றிப் பேசியபோது, பிரசங்க பீடத்திலிருந்து நான்செய்ய விரும்பும் ஆத்துமஇரட்சணிய அலுவலை அதைக்கொண்டும் செய்யலாமென உணர்ந்தேன்."

பின்னர் சொற்பகாலத்தில் அவள்இறந்துபோயினாள். அவள் இறந்து சொற்பகாலத்தின்பின் அவளைப்பராமரித்த அந்தவாட்டின்தாதியும் வேதசத்தியங்களைப்படித்து இப்போது ஓர் கத்தோலிக்க பெண்மணியாய் இருந்துவருகின்றாள்.



# பல தேசங்களில்

## வானவெளி சென்றுதிரும்பிய நாய்களும் அணிலும்

அமெரிக்கா சென்றவைகாசிமாதம் 28-ந்திகதியன்று இருபெண்குரங்குகளை வானவெளியிலே 300 மைல்உயரத்துக்கு அனுப்பிவைத்தது. அவைகள் சுமார் 1,500 மைல் பிரயாணத்தின்பின் சேமமே திரும்பவும் பூமியில் வந்திறங்கின. அவ்வாறாக இரண்டு நாய்களையும், ஒருஅணிலையும் ஏற்றிச்சென்ற சோவியற்றொக்கெற் ஒன்று வானவெளிக்குச் சென்றுவிட்டுச் சொல்லப்பட்டஇடத்திற்குத் திரும்பவும் சேதமின்றியே வந்துசேர்ந்ததாக மஸ்கோவானொலி அறிவித்துள்ளது. நாய்களும், அணிலும் நல்லசுகத்துடன் இருக்கின்றனவாம். ஆனால், இவைகளை ஏற்றிச்சென்றறொக்கெற் எவ்வளவுஉயரத்துக்குச் சென்றதுஎன்பது அறிவிக்கப்படவில்லை. இரண்டுநாய்களிலும் 'டேறிங்'என்ற நாய் இப்பொழுது மூன்றாம்முறையாக வானவெளிக்குச் சென்றுள்ளதாம். இந்த றொக்கெற்றில் இணைக்கப்பட்டிருந்த பலவிஞ்ஞான ஆராய்ச்சிக்கருவிகளும் எவ்விதபழுதுமடையாமலே திரும்ப வந்துசேர்ந்துள்ளனவாம். இக்கருவிகள்பதிவுசெய்திருக்கும் வேகம், திசை, தட்பவெட்பம்போன்ற பலஅம்சங்களும் விஞ்ஞானிகளால் ஆராயப்படவிருக்கின்றன. இரண்டுதொன்நிறையுள்ள இந்தறொக்கெற் ஆடிமாதம் 2-ந்திகதி காலை 6-40மணிக்கு வானவெளிக்கு அனுப்பப்பட்டதென்றும், இப்பரீட்சை வானவெளிக்கு உயிர்ப்பிராணிகளை அனுப்புதற்கான முயற்சியல்ல, ஆனால், றொக்கெற் குறித்தஇலக்கிற்குத் திரும்பிவந்துசேருவதுபற்றிய ஆராய்ச்சியேயென்றும் மஸ்கோவானொலி குறிப்பிட்டுள்ளது.

* * *

## மனுமாமிஷ பட்சணிகள்

மனுமாமிசபட்சணமும், பந்தையத்துக்கு மனிததலையை வேட்டையாடுவதும் இன்னுமேவழக்கத்தில் இருந்துவருகின்ற சதுப்புநிலக்காடொன்றிலே அமெரிக்க குரேசியர்சபைக்குருமார் தற்போது வேதப்பரப்புதல் நிலையமொன்றை ஆரம்பித்திருக்கின்றனர். இவர்களின் தலைமைஸ்தானம் உலாந்த தென்மேற்கு நியூகினியாதீவிலுள்ள அஸ்மாத்பகுதியைச்சேர்ந்த அகாற்ஸ் எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நியூகினியாவின் இந்தப்பகுதியிலுள்ள சுதேசிகள் இன்னமும் கற்காலத்திலே இருக்கின்றார்கள். உருக்குஆயுதங்கள் அவர்களிடம்கிடையாது. போசனபதார்த்தங்களைத் தேடுவதிலேயே அவர்கள் தங்கள்நேரத்தில் அதிகமான பகுதியைச் செலவிடுகின்றார்கள். அவர்கள் கமத்தொழிலை அறியமாட்டார்கள். அங்குசென்றுள்ள மிஷனரிமார் அவர்களின்சேற்றுநிலத்தில் என்னபயிர்களை உற்பத்திசெய்யலாமெனக் கண்டறிவார்கள்.

* * *

● ஆபிரிக்காவிலே வெள்ளைக்குருமார் சபையைச்சேர்ந்த கத்தோலிக்க குருமார் தங்களது615மிஷன்களிலும் சென்ற1958-ம்ஆண்டிலே 13,87,950 ஆபிரிக்கமக்களை மனந்திருப்பி ஞானஸ்நானங்கொடுத்துக் கத்தோலிக்கராக்கியிருக்கின்றார்கள். தற்போதுஅவர்களுடையமிஷன்களிலே ஞானஸ்நானத்துக்கு ஆயத்தஞ்செய்வோராய்ப் 11,38,564பேர் இருந்துவருகின்றார்கள்.

● லூர்துபதி செபமாலைக்கோவிலிலே திவ்வியநற்கருணை முன்பாகத் திருச்சிலுவைக் குமாரத்திகள்சபைக் கன்னியாஸ்திரிமார் காலை8மணிமுதல் மாலை7மணிவரை காவல்செய்து வருகின்றார்கள். பாப்பரசர்தெரிவித்துள்ள விருப்பின்பேரிலே இத்தாலியிலிருந்து இவர்கள் அனுப்பிவைக்கப்பட்டார்கள். லூர்துபதியில் திவ்வியசற்பிரசாதத்துக்கு நித்தியஆராதனை நடைபெறவேண்டுமென்பது பாப்பரசரின்விருப்பமாகும்.

## குருஷேவின் வீரகர்ச்சனை

நியூயோர்க்நகரின் முன்னாள்கவர்னர் திரு. ஆவறெல் ஹறிமன் அவர்கள் சோவியற்ருஷியாவுக்கு விஜயஞ்செய்துவிட்டுத் திரும்பவும் நியூயோர்க்நகர் போய்ச் சேர்ந்துள்ளார். இவர் மஸ்கோவிலே சோவியற் பிரதமர் நிகிதா குருஷேவைக் கண்டு பேசியபோது அவர் பின்வருமாறு கூறினாராம்: "மேற்குநாடுகள் மேற்குப் பேர்லீனுக்குள் தாங்கிகளை அனுப்புமானால் அவைகள் எரிவதுநிச்சயம். இதுபற்றிச் சந்தேகமே வேண்டாம். நீங்கள் விரும்பினால் யுத்தத்தில் இறங்கலாம். ஆனால், அது நீங்கள்ஆரம்பித்த யுத்தமாகவே இருக்குமென்பதை மறந்துவிடாதீர்கள். அப்போது எங்கள் றொக்கெற்றுகள் தாமதமின்றிப் பறந்துவரும். சோஷலிஸ்த அடிப்படையில் அமையாத ஐக்கியஜேர்மனிக்கு ருஷியா ஒருபோதும் உடன்படமாட்டாது. ஜெனிவா மகாநாட்டில் எங்கள் வெளிநாட்டுமந்திரி குறோமிக்கோ வழமைபோல உறுதியுடனிருப்பார். அவர் கடினமான ஓர்பேர்வழியாவர். ஏற்கனவே கூறியுள்ளவற்றைத்தான் அவர் திரும்பக்கூறுவார். இன்றேல் அவரைத்தள்ளிவிட்டு வேறொருவரை அனுப்புவோம். உங்கள் ஜெனறல்கள் பலாத்காரமூலம் பேர்ளினில் தங்கள் ஸ்தானத்தை நிலைநாட்டப்பார்க்கிறார்கள். இது வெறும்பித்தலாட்டம். நீங்கள் தாங்கிகளை அனுப்பினால் எங்கள் றொக்கெற்றுகள் பறக்கும்."

* * *

● மணித்தியாலம் 25,000 மைல் வீதம் தீவிரவேகமாகச்செல்லும் வானவெளிக் கப்பலொன்று சந்திரனைப் போய்ச்சேரப் 10மணித்தியாலம் செல்லுமென்றும், அதேவேகத்தில் செவ்வாய்க்கிரகத்தைப்போய்ச்சேர 58நாள் செல்லுமென்றும், சுக்கிரனைப்போய்ச்சேர 43நாள்செல்லுமென்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

● கைத்தொழிலுக்கான விறகாகப் பாவிக்கப்படும் நிலக்கரியிலிருந்து எழுந்து குழாய்கள்மூலம் மேலேஆகாயத்திற் செல்ல விடப்படுகின்ற புகையைப்பயன்படுத்தும் அமெரிக்கபுதியசாதனம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இச்சாதனங்கொண்டு அப்புகையிலிருந்து பூச்சிகளைக்கொல்லும்மருந்து, செயற்கைறப்பர், சாயம், வர்ணம், மெழுகுவர்ணம், பரிமளம், அஸ்பிறின் ஆதியன செய்யப்படுகின்றன.

● இந்தியாவிலுள்ள பாலங்களிலெல்லாம் மிகநீளமானபாலம் சோன் பாலமே. இது 10,052 அடி நீளமுடையது. இந்தியாவின் மிகப்பெரிய குகைக்கோவில் ஹைதராபாத்இராச்சியத்தில் உள்ளது. இது 'எல்லோரா' என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவின் நதிகளிலெல்லாம் மிகவும்நீளமானது கங்கைநதி. இது 1,500 மைல் நீளமுடையது.

● சீனஆடவர்களும், பெண்களும் தினமும் 18மணித்தியாலம் வேலைசெய்யப் பலவந்தஞ்செய்யப் படுகின்றனரென்றும், ஒவ்வோர் நான்குவாரத்துக்கும் ஒருநாள்மாத்திரமே ஓய்வளிக்கப் படுகின்றனரென்றும், புருஷர்களும், மனைவியர்களும், பிள்ளைகளும் ஒருவரிலிருந்து மற்றவர்கள் பிரித்துவைக்கப் படுகின்றனரென்றும் கம்யூனிஸ்தசீனா நவமாகச்சிருட்டித்த கூட்டுக்கமங்களிலிருந்து தப்பியோடியவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

## தினமும் ஆயிரம்அகதிகள்

சுதந்திரமேற்குஜேர்மனி கடந்த 15 வருடங்களிலும் கம்யூனிஸ்த சுவர்க்கபூமியிலிருந்து சுதந்திரத்தைநாடித் தப்பியோடிவந்து தன்னிடம்அடைக்கலம்புகுந்த 1கோடியே 20லட்சம் மக்களுக்கும் உதவியாகப் 11லட்ச கோடிடலர் செலவிட்டிருக்கிறது. 1945-ம்ஆண்டு கம்யூனிஸ்த கிழக்கு ஜேர்மனியிலிருந்து வெள்ளம்போன்று மேற்குஜேர்மனியைநாடிச் சரியத்தொடங்கியஅகதிகள் காலந்தோறும் அதிகரித்து இன்று தினமும் சராசரியாக ஆயிரம்பேர்வீதம் அங்குபோய்ச் சரிந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் மேற்குஜேர்மனி உறைவிடம், உணவு, உடை ஆதியன வழங்கிப் புதுவாழ்வைத் தொடக்கிவைப்பதற்கான வசதிகளெல்லாம் செய்துகொடுப்பதில்தான் 11லட்ச கோடிடலர்செலவிடலாயிற்று. இத்தொகை மாஷல்உதவித்திட்டத்தின் கீழ் மேற்குஜேர்மனி பெற்றுக்கொண்ட உதவிப்பணத்தைப்போல் ஏழுமடங்காகும். இரும்புத்திரைக்குப் பின்னுள்ள கம்யூனிஸ்தநாடுகளிலிருந்து நாடுகடத்தப் பட்டவர்களாலும், அவற்றிலிருந்து அகதிகளாகப்போய் அடைக்கலம்புகுந்தவர்களாலும் மேற்குஜேர்மனியின் சனத்தொகை 5கோடியே 20லட்சம் போரகியிருக்கிறது.

## தீபேத்தும் கம்யூனிஸ்த அட்டூழியங்களும்

புத்தமதக்கல்விக்குப் புகழ்பெற்ற தீபேத்தியதலைநகரான லாஸாநகரிலே லாமாயிஸத்தையும், புத்தமதத்தையும் பற்றி ஆராய்ச்சிகள்நடத்திய 29 லாமாக்கள் சென்ற16-ந்திகதி அங்கிருந்து ஸ்ரீநகர்வந்து சேர்ந்திருக்கிறார்கள். சீனப்படைகள் தீபேத்திலுள்ள கோவில்களை நாசஞ்செய்து, நூற்றுக்கணக்கான லாமாக்களையும், மற்றும் தீபேத்தியர்களையும் படுகொலைசெய்திருப்பதை இந்தலாமாக்களின்பேரால் 30 வயதுடைய கல்ஸக் லாமா கூறியிருக்கின்றார். முன்னைநாள் போர்வீரரான இவர் மேலும் தெரிவித்ததாவது: லாஸாமக்கள் சீனப்படைகளைஎதிர்த்துத் தைரியமாகப் போராடினார்கள். சீனப்படைகள் பொதுமக்கள்மீது ஈவிரக்கமின்றிக் குண்டுகளைப்பொழிந்தன. தலாய்லாமாவின் அரண்மனைமீது பீரங்கிப்பிரயோகம் செய்யப்படுவதையும், அரண்மனைக்கட்டடம் நாசமாவதையும் நான் நேரில்பார்த்தேன். தலாய்லாமா எங்கிருந்தாலும் தீபேத்மக்கள் அவரைக் கௌரவிக்கிறார்கள். பஞ்சன்லாமா சீனர்களின் நண்பன் என்பதைத் தீபேத்மக்கள் நன்கறிவார்கள்.

* * *

● வருகிறஆவணிமாதத்திலே 80 வயதுஅடையவிருக்கும் பெலிஸ் கறேனாஎன்ற சைத்திரிகர் 23-ம்அருளப்பபாப்பரசரின் அதிகாரபூர்வமுதலாவதுபிரதிமையைச் சித்திரிக்குமாறு அமர்த்தப்பட்டிருக்கிறார். இவர் பரிசுத்தபிதா பாப்பரசராகத்தெரியப்படுமுன் பத்திரியாக்குவாகவிருந்த வெனிஸ்நகரிலே இவர் தம்முடைய ஸ்ருடியோவைக் கொண்டிருக்கின்றார்.

## சிரிப்பே சிறந்த மருந்து



"சிரிப்பே சிறந்தமருந்து"என்றார் ஓர்கலைவாணர். மனிதவர்க்கத்துக்கே உரித்தான இந்தச்சிரிப்பைத் தருவதுதான் நகைச்சுவை. நகைச்சுவையை விரும்பாதவர்கள் எவருமே இருக்க முடியாது. அப்படிஇருந்தால் அவர்கள் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்களாய் இருக்கமாட்டார்கள். நகைச்சுவையில் பலவகைஉண்டு. ஒருகருமம் பற்றி ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது தனக்கு அதில்நம்பிக்கை இல்லையென்பதை எவராவது நகைச்சுவைமூலம் அவருக்கு உணர்த்திவிடலாம். மற்றவரை மட்டந்தட்டவும் நகைச்சுவைஉதவுகிறது. இதோ ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கையிலிருந்து...

ஆபிரகாம் லிங்கன் ஒருமுறை ஒரு தேர்தல்கூட்டத்திற்குச் சென்றார். அங்கே தேர்தலில் போட்டியிட்டஒருவர் "நீங்கள் சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டுமானால் எனக்கு வாக்களியுங்கள்; நரகத்திற்குச்செல்ல விரும்பினால் எதிர்க்கட்சிக்கு வோட்டுப்போடுங்கள்; எங்கே எனக்கு வோட்டுப்போட்டுச் சொர்க்கத்துக்குச் செல்லவிரும்புகிறவர்கள் கைகளைஉயர்த்துங்கள்" என்றார். ஆபிரகாம் லிங்கனைத்தவிர, மற்றவர்கள்அனைவரும் கைகளைஉயர்த்தினர். உடனே லிங்கனைநோக்கி: "நீ சொர்க்கத்திற்கு வரவில்லையா?" என்றார். உடனேலிங்கன் "நான் சொர்க்கத்திற்கும்வரவில்லை, நரகத்திற்கும் வரவில்லை,வீட்டிற்குப்போகிறேன்"என்று எழுந்துசென்றார். இந்த நகைச்சுவையின்மூலம் லிங்கன் தேர்தலுக்குநின்றவரில் தனக்கு நம்பிக்கையில்லையென்று தெளிவுபடுத்தினார்.

மேனாட்டு எழுத்தாளர்களிலே முன்னணியில்நின்றவர் பெர்னாட் ஷா. ஒருநாள் அவரைக்காண அவரது நண்பர் ஒருவர் அவரின் வீட்டுக்குச்சென்றார் சிறிதுநேரம் அளவளாவியபின் ஷாவிடம் நண்பர், "ஷாஅவர்களே! இந்த வீட்டிற்குப் புதிதாகவருகிறவர்கள் உங்களைப்பார்த்தபின் இந்தநாட்டில் பஞ்சம்வந்துவிட்டதோ என்று எண்ணுவார்கள்"என்றார். காரணம்பெர்னாட்ஷாவின்உடல் அவ்வளவு மெலிந்திருந்தது. உடனே ஷா, "உம்மைப்பார்ப்பவர் இந்தநாட்டில்பஞ்சம்வர நீர்தான் காரணமென்று நினைப்பார்கள்"என்று அந்தத் தடித்தநண்பரைநோக்கிக் கூறினார். எப்படி இந்தநகைச்சுவை? ஆளையே மட்டம்தட்டிவிட்டது அல்லவா?

பிழைபுரிந்தோரைத் திருத்தவும் நகைச்சுவை பயன்படுகிறது. இதற்கு ஒருசான்று...... ஒருமுறை விவேகானந்தர் புகைவண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அவருக்கெதிரே இரண்டு ஆங்கிலேயஇளைஞர்கள் அமர்ந்துகொண்டு அவரின் காவிஉடையையும், மொட்டைத்தலையையும்பார்த்துப் பரிகசித்துக்கொண்டிருந்தனர், விவேகானந்தருக்கு ஆங்கிலம் தெரியாது என்றஎண்ணத்தில். அவரும் இதைக் கேட்டுக்கொண்டே இருந்தார். வெகுநேரஞ்சென்று வண்டிஒருநிலையத்தை அடைந்தது. அப்பொழுது அவர் அவர்களைநோக்கி: "இங்கே தண்ணீர் கிடைக்குமா"என்று ஆங்கிலத்தில் கேட்டார். இளைஞர்கள்இருவரும் திடுக்கிட்டு அவரின் பொறுமையை நினைந்து மன்னிப்புக்கோரினார்கள்.

ஆகவே, நகைச்சுவையை நாமும் நமதுவாழ்வில் அறிஞர்கள் கடைப்பிடித்ததுபோன்று பயனுள்ளதாகக் கடைப்பிடிக்கவேண்டும். வாழ்க்கையில் துன்பத்தைக்கண்டு துவளாமல் சிரிக்க வேண்டும்.

அ. பி.

## ஐந்துகாய வரத்தரான பியோ சுவாமியார்

கப்புச்சின்சபையைச் சேர்ந்தவரும், இரட்சகரின் ஐந்து திருக்காயங்கள் தமது சரீரத்திலே அற்புத விதமாகப் பதியப்பெற்றுள்ளவரும், தென் இத்தாலியிலே சான் ஜியோவான்னிறெட்ரன்டோ எனுமிடத்தில் சஞ்சரித்து வருகிறவருமான வண. பியோ சுவாமியார் சமீபத்திலே தமது சந்நியாச ஆச்சிரம சிற்றாலயத்தில் திவ்விய பூசை நிறைவேற்றிக்கொண்டிருந்தபோது திடீரென நோய்கண்டு மூர்ச்சித்த நிலைமையிலே ஆஸ்பத்திரி கொண்டுசெல்லப்பெற்று அங்கு தீவிர குணமடையலாயினர். ஆஸ்பத்திரியிலே அவர் இருந்தபோது, அன்று இராமுழுவதும் அதற்குவெளியே திரளாக மக்கள் கூடிநின்று அவர் குணமடையுமாறு செபஞ்செய்துகொண்டிருந்தார்கள். தற்போது 72 வயதுடையவரான வண. பியோ சுவாமியார் ஏறக்குறைய 40 வருடகாலமாக ஐந்து திருக்காயங்களைக் கொண்டவராய் இருந்துவருகின்றார்.

—※—

# வத்திக்கானில் ஜப்பானிய பிரதமர்

ஜப்பானியபிரதமர் நொபுசுக் கிஷி அவர்கள் இத்தாலிய அரசாங்க அதிகாரிகளுடனும், 23-ம் அருளப்ப பாப்பரசருடனும் “இருதயபூர்வமும், சிநேகபான்மையு” மான இரண்டரைநாள் சம்பாஷணைகளை இன்று பூர்த்திசெய்யலாயினரென ரோமைநகரிலிருந்து சென்ற 21-ந் திகதி தந்திச்சமாச்சாரம் எட்டலாயிற்று. மேலும் அச்செய்தியின் விபரம் வருமாறு: ஜப்பானிய பிரதமர் குயிறினல் மாளிகையிலே இத்தாலியஜனதிபதி ஜியோவான்னி குரொஞ்சிஅவர்களால் அளிக்கப்பட்ட ஓர்விழா சம்பந்தமான விருந்துபசாரணையில் கௌரவ விருந்தினராக இருந்தார். அதற்கு இத்தாலிய அரசாங்க அதிகாரிகள்அநேகர் சமுகமளித்திருந்தனர்.

“பரிசுத்த ஸ்தானத்தினிடமாய் இருந்துவருகின்ற ஜப்பானிய ஸ்தானிகராலயத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலே அவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார். வத்திக்கானுடன் தற்போதுள்ள இராசீயஉறவுகள் மட்டிலே நான் திருப்தியடைந்திருக்கிறேன்; ஆனால், வருங்காலத்திலே அவைகளை இன்னும் அதிகமாக அபிவிருத்திசெய்ய நான் ஆசிக்கின்றேன்; ஏனெனில், பரிசுத்தஸ்தானம் ‘உலகில் மாபெரும் ஆத்மீகபல’மாய் இருக்கின்றது; ஜப்பானிய பிரச்சினைகளிலே — முக்கியமாக அதன் மிதமிஞ்சிய சனத்தொகை மட்டிலே ஆழ்ந்தவிளக்கம் காண்பித்திருக்கின்றது.

“யுத்தத்தின்பின் உடனடியாகத்தானே மிஷனரிமாரும், கன்னியாஸ்திரிமாரும் கல்வி, சமூக துறைகளிலே மிகுந்த ஆர்வத்துடன் அங்குபணியாற்றத்தொடங்கினர்கள்; இது ஜப்பானின்புனருத்தாரணத்திற்குப் பேருதவியாயிற்று; ஜப்பானிலே கத்தோலிக்க திருச்சபை ஆற்றிவந்த தொண்டு யுத்தத்துக்கு முன்னர்தானும் எப்போதும் கண்ணியமான இடத்தை வகித்திருந்தது; ஆனால், யுத்தத்திற்குப்பின் சமூக தாறுமாறுகளும், இளைஞர்களின் ஒழுங்கீனங்களும் காரணமாக அது இன்னும் அதிக முக்கியத்துவம் வகிக்கலாயிற்று”

—※—

# கலியாண மோதிரங்களிலிருந்து தங்கப் பூசைப்பாத்திரம்

இங்கிலாந்திலே லிவர்ப்பூல் நகர் அதிமேற்றிராசனக் கோவிலுக்கென்று 300,22 கறற்றிறைக்கு மேற்பட்ட கலியாண மோதிரங்கள்கொண்டு முதலாவது சுத்ததங்கப் பூசைப்பாத்திரம் ஒன்று செய்யப்பட்டிருக்கிறது. வழமையான பூசைப்பாத்திரங்களிலும் அதிகம்பெரியதும், பளுவானதும், அலங்கார வேலைப்பாடுடையதுமான இந்தப்பாத்திரம் பெரியபாடற்பூசையின்போது அதிமேற்றிராணியாரால் பிரயோகிக்கப்படும். லிவர்ப்பூல் அதிமேற்றிராசனக் கோவிலைக் கண்காணிப்பவரும், ஆராதனை வழிபாடுகளை அணிவகுப்பவருமான கனன் தோமஸ் ரேணர் சுவாமியார் பூசைப்பாத்திரங்கள் செய்ய உபயோகப்படுத்துமாறு அனுப்பப்படும் கலியாணமோதிரங்களையும், ஆபரணங்களையும் தினமுமே பெற்றுவருகின்றார். அதனால், மற்றோர் தங்கப்பூசைப்பாத்திரத்தையும் உடனேதானே செய்வதற்குப்போதிய மோதிரங்களை இப்போது அவர் இருப்பில் கொண்டிருக்கின்றார். எஞ்சிய தங்கமும், வெள்ளியும் ஏனைய திருப்பாத்திரங்கள்செய்வதற்குப் பயன்படுத்தப்படவிருக்கின்றன.

—※—

## நாட்டிலே திருச்சபையின் செல்வாக்கு
# இன்னுமே மிக அதிகம்

இரும்புத்திரைக்குப் பின்னுள்ள செக்கோசிலவக்கியாவிலே திருச்சபையின் செல்வாக்கு “இன்னுமே மிகஅதிகமாய் இருக்கிறது”என்று ‘றாட் பிறவோ’ என்ற செக் நாட்டில் பிரசுரமாகும் கம்யூனிஸ்த பத்திரிகை முறையீடு செய்திருக்கின்றது. ஞானஸ்நானங்களும், கோவில் திருமணங்களும், கிறீஸ்தவ பிரேத அடக்கங்களும் இன்னுமே மிகப்பெருந் தொகையாய் நடைபெறுகின்றனவென்று இப்பத்திரிகை கூறி, இந்தக் கோவில் திருச்சடங்குகளினிடமாகத் தகுதிவாய்ந்த கம்யூனிஸ்த வைபவங்களை ஏற்படுத்துதற்கான ஓர் வழிவகையை நாட்டிலுள்ள கம்யூனிஸ்த அதிகாரிகள் கண்டறியவில்லையே என்று அவர்கள்மேல் குற்றம்பாரித்திருக்கிறது. சமயகொள்கைகளை எதிர்த்துப் போராடுவதற்குச் செக்நாட்டுப் புதினப்பத்திரிகைகள் போதிய இடம் கொடுப்பதில்லையென்று முன்சொன்ன பத்திரிகை முறையீடுசெய்து, பத்திரிகைகளிலே அதிகமதிகம் நாஸ்திக கட்டுரைகள் வெளிவரவேண்டுமென்று கேட்டும், நாஸ்திகத்தைப் போதித்துப் பிரபல்யப்படுத்தும் வேலையைத் தீவிரமாக்க வேண்டுமென்றும் கேட்டு வாசகர்கள் “எண்ணற்ற”கடிதங்கள் தனக்கு அனுப்பியிருப்பதாகப் பெருமையடித்திருக்கின்றது.

—※—

# பெல்ஜிய இளவரசரின் திருமணம்

லியேஜின் அல்பேட்இளவரசருக்கும், தொன்னா பவுலோ றுவ்வோவுக்கும் சமீபத்திலே பிறசெல்ஸ்நகரில் திருமணம் நிறைவேறியபோது, அவர்கள் கலியாணமோதிரம்மாற்றிக்கொள்ளுமுன் பாப்பரசர்அனுப்பிவைத்த ஆசிச்செய்தி வாசிக்கப் படலாயிற்று. அவரே இத்திருமணத்தை அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தில் நிறைவேற்றிவைக்க உடன்பட்டிருந்தார். ஆனால், பெல்ஜியமக்களோ இளவரசர் தமது சுயநாட்டிலேயே மணஞ்செய்துகொள்ள வேண்டுமென ஆசித்தார்கள். அதனால் முந்திய ஒழுங்கு மாற்றப்படலாயிற்று. “மலைன்ஸ்நகரின் கருதினல் அதிமேற்றிராணியார் சமுகத்திலே சர்வேசுரன் முன்பாக நீங்கள் ஐக்கியபந்தனமாகவிருக்கின்ற இச்சுப சந்தர்ப்பத்தில் நீங்கள் மனப்பாக்கியமாக வாழவேண்டுமென்று பிதாவுக்குரிய நமது விருப்பைத் தெரிவிக்கின்றோம்; பெருந்தகைமைவாய்ந்த உங்கள் குடும்பங்களின் அருமையான பிதிரார்ச்சித சொத்தாக அமைந்துள்ள ஆழ்ந்த வேதவிசுவாசத்தோடும், சகலமான கிறீஸ்தவ புண்ணியங்களோடும் பிரகாசிக்குமென நாம் நிச்சயமாயிருக்கின்ற ஓர் குடும்பத்துக்குப் பரலோக பாதுகாவலை நமது முழு இருதயத்தோடும் கேட்டு, இந்த மகத்தான தினத்திலே உங்களுக்கும், பெல்ஜிய இராசகுடும்பத்துக்கும், உங்களுடன் சமுகமாயிருக்கும் அனைவருக்கும் ஓர் விசேஷ அப்போஸ்தலிக்கஆசீர்வாதம் வழங்குகிறோம்” என்று பாப்பரசர் தமது ஆசிச்செய்தியிலே அறிவித்திருந்தார்.

## யூதாசின் முத்தம்

“யூதாசின் முத்தம்” எனும் நாமத்துடன் ஒருமணிநேரம் காண்பிக்கப்படக் கூடியதான புதிய சினிமாப்படம் ஒன்று ஐக்கிய அமெரிக்கதேசத்தின் பல்வேறு நகரங்களிலும் தற்போது காண்பிக்கப்பட்டு வருகிறது. இது ஐரோப்பாவிலே படம்பிடித்துத் தயாரிக்கப்படலாயிற்று. இதிலே இருநூறுபேர் நடிக்கின்றனர். திருப்பாடுகளின் வரலாற்றையும், கிறீஸ்துநாதரின் மரணத்தையும் அவரைக் காட்டிக்கொடுத்தவனான யூதாஸ் கண்ணாரக் கண்டதுபோன்று இப்படம் அத்துணை நல்லமாதிரியாய்த் தயாரிக்கப்பட்டுள்ளது. இதுதவிர “வெற்றிவிழாக் காலம்” எனும் நாமத்துடன் கிறீஸ்துநாதர் மரித்தவர்களிடத்தில்நின்று உயிர்த்தெழுந்தருளியதையும், பரலோகத்துக்கு ஆரோகணமானதையும் காண்பிக்கும் மற்றோர்சினிமாப்படமும் தயாரிக்கப்பெற்று அங்கு காண்பிக்கப்படுகிறது. செபங்களும், கீதங்களும்அடங்கிய இந்தச் சினிமாப்படத்திலே ஹொலிவூட்டின் பிரபலநடிகர்கள் இருபது பேருக்குமேல் நடித்திருக்கின்றார்கள். திருச்சிலுவைச்சபைக் குருமார்சபையைச்சேர்ந்த வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமிகளது வழிகாட்டுகையின் கீழுள்ள “குடும்ப தியேற்றர்” ஸ்தாபனமே இவ்விரு சினிமாப்படங்களையும் தயாரித்துள்ளது.

## பரிசுத்த ஸ்தானமும் யூகோசிலேவியாவும்

கம்யூனிஸ்த ஆட்சியின்கீழ் இருந்துவருவதும், மாஷல்ரிற்றோவைச் சர்வாதிகாரியாகக் கொண்டிருப்பதுமான யூகோசிலேவிய அரசாங்கம் பரிசுத்தஸ்தானத்துடன் இராசீய உறவுகளைச் சீர்திருத்திக்கொள்ள முயன்றுவருவதாய் அறிவிக்கப்படுகிறது. அந்நாட்டின் தலைப்பட்டணமாகிய பெல்கிறேட்நகரின் உஜ்சிக் அதிமேற்றிராணியார் சமீபத்திலே வத்திக்கான் சென்று திரும்பியதும் அரசாங்க சமயவிவகார கம்மிஷனின்தலைவரான திரு. டொபிறிலோஜி றடோஸா வியெவிக் என்பாருடன் ஆலோசனை நடத்தியதுபற்றிய அறிக்கைகளிலிருந்தே இது புலனாயிருக்கிறது. ஆனால், கருதினல் ஸ்ரிபினக் ஆண்டவருக்கு யூகோசிலேவிய அரசாங்கம் 1946-ம் ஆண்டு பெரும் அநீதியாகப் 16 வருட சிறைத்தண்டனை விதித்து, கிருஸிக் என்ற அவரது சொந்தக் கிராமத்திலே இல்லக்காவலில் வைத்துக் கண்ணியக்குறைவாய் அவரை நடத்திவருவதானது வத்திக்கான் – யூகோசிலேவிய இராசீயஉறவுக்குப் பெருஞ்சிக்கலாய் இருந்துவருகிறது.

## ஆவணி மாதம்

**பொதுக்கருத்து:** திருச்சபையின் சமூகப்போதனையை உலகம்எங்கும் நாள்தோறும் அதிகம் பயனளிக்கும் வகையில் பரப்புவதற்காக வேண்டிக் கொள்வது.

**வேதபோதககருத்து:** வேதபோதக நாடுகளில் தேவஅழைத்தல்கள் பெருகுவதானது பணத்தட்டுப்பாட்டினுல் தடைப்படாதிருப்பதற்காக மன்ருடிக்கொள்வது.

சத்திய வேத

# பாதுகாவலன்

1959-ம் ஆண்டு
ஆடிமாதம் 30-ந் திகதி

## "நாட்டைக் காப்பாற்றுங்கள்"

முன்னைநாள் உணவு-விவசாய மந்திரி பிலிப் குணவர்த்தனவுக்குக் கத்தோலிக்கரென்ருல் — கத்தோலிக்க சமயமென்ருல் தெளிவெண்ணெய் போன்று அத்துணை தித்திப்பாயிருக்கும். "இந்த நாட்டிலுள்ள கத்தோலிக்கரும், கத்தோலிக்க திருச்சபையும் அரசாங்கத்திற்கெதிராகச் சதியாலோசனை செய்கின்றனர், சதியாலோசனை செய்கிறது; இதற்குச் சான்றுகள் என்னிடம் உண்டு; சதியாலோசனை செய்வதற்குக் கூடும்இடங்களாகக் கத்தோலிக்ககோவில்கள் பயன்படுத்தப் படுகின்றன" என்று அவர் மந்திரியாய் இருந்தபோது கரண்டுப்போனை எனுமிடத்தில் நடந்தேறிய பகிரங்க கூட்டம் ஒன்றில் பேசினுரெனப் பத்திரிகைகளில் செய்திவரலாயிற்று. ஆனுல், இந்தச்செய்தியை அவர் மறுக்கவுமில்லை. தான் கூறியதற்கான சான்றுகளை எடுத்துக் காட்டவுமில்லை. மக்களிடையே எந்தஒருபாலாருக்கும் மாருகச் செய்யப்படும் இத்தகைய குற்றச்சாட்டுகள் உண்மையாயிருப்பின் அவைகள் பெரும்பாரதூரமானவைகளாகும். ஆனுல், அவ்விதம் உத்தண்டமாகப்பேசிய தோழர் பிலிப் பேசியும்பேசாதவர்போல் மவுனஞ்சாதித்துக்கொண்டார். இதுசெயலை வெறும்வாய்வீரம் என்பதா? அன்றேல் பெருங்கோழைத்தனம் என்பதா?

அங்ஙனமாக, பிரதமர்பண்டாரநாயகாவின் மந்திரிசபையிலே தான்ஓர்மந்திரியாய்இருந்தபோது, அவரை வானமட்டாக வாழ்த்திப்போற்றிவந்து அம்மந்திரிபதவியை இழந்தபின் அவரைப் பிற்போக்குவாதியென்றும், அவருக்குப்பேசத்தெரியும், ஆளத்தெரியாதென்றும், கோழிக்குஞ்சுக்குக் குள்ளநரிபோல் காவல்இருப்பவரென்றும் அவரைப் பாதாளமட்டாகத் தூற்றிக் கொண்டுதிரிகின்ற திரு. பிலிப் குணவர்த்தன அன்று ஓர்கூட்டத்தில் பேசியபோது, கத்தோலிக்கரிடமிருந்து நாட்டைக்காப்பாற்றுங்கள்; முற்போக்குவாதிகள் கொண்டுவரும் சோஷலிஸத்திட்டங்களைப் பிற்போக்குவாதிகளுடன் ஒன்றுசேர்ந்து தங்கள் மூலவளத்தையும்,பணப்பலத்தையும்கொண்டு கத்தோலிக்கர் முறியடிக்கின்றனரெனக் கூச்சலிட்டிருக்கின்ருர். இங்கே முற்போக்குவாதிகளென்று திரு. பிலிப் குணவர்த்தன குறிப்பிடுவது தன்னையும், தன்னேடுசேர்ந்த மாக்ஸியவாதிகளையுமேயன்றிப் பிறர்எவரையுமல்ல. அதனுல், கத்தோலிக்கரிடமிருந்து தங்களைக்காப்பாற்றும்படி ஓலமிட்டு ஊரையெல்லாம் கூவியழைப்பதற்குப் பதில், கத்தோலிக்கரிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுங்களென்று ஓலமிட்டிருப்பது ஒருதந்திரச் செயலாகும். ஏன்? ஏனெனில், அவர் கூறியதுபோல் தாங்கள்கொண்டுவரும் சோஷலிஸத்திட்டங்களை முறியடிப்பவர் யார்? கத்தோலிக்கர்அல்லவா? அவ்வாருக நாட்டைக் காப்பாற்றுங்களென்று அவர்ஓலமிட்டு, நாட்டிலுள்ளவர்களையெல்லாம் கத்தோலிக்கருக்குமாருகக் கிளர்ச்சிபண்ணிவிடுவான் அவர்செய்யும் நரித்தந்திரம் எவர்க்குமே விளங்காமற் போகுமா?

திரு. பிலிப் குணவர்த்தனவும், அவர்தோழர்களும் கத்தோலிக்கர்மேல் பழிசுமத்தியபோதிலும் சமீபகாலத்தில் தீபேத்திலும், ஹங்கேரியிலும், இன்று கேரளத்திலும்நடைபெற்ற —நடைபெறுகின்ற பயங்கரசம்பவங்கள் இந்நாட்டுமக்களின் கண்களைத் திறந்துவிட்டிருக்கின்றன. அன்று ஒருகூட்டத்தில் முன்னைநாள்மந்திரிஒருவர் பேசியபோது, "இந்நாட்டினை இப்பொழுது இருதீயசக்திகள் ஆக்கிரமிக்கின்றன; அவற்றில்ஒன்று கம்யூனிஸ்தர்கள்" என்று பிரசித்தமாகக்கூறியிருப்பதுஒன்றே நாம் எடுத்துக் காட்டுவதற்குப் போதியசான்ருகும். ஈற்றில் 25-ந்திகதி சனிவாரம் பிரசுரமான "தினகர"னில் வெளிவந்த "காட்டு"னின் கீழ் வரையப்பட்டிருந்ததை ஈண்டுபெயர்த்துத் தருகின்ருேம். அதாவது, "கத்தோலிக்கரிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுங்கள் என்கிருர் பிலிப்! பிலிப்பிடமிருந்து கத்தோலிக்கரைக் காப்பாற்றுபவர் யார்?

---

## கத்தோலிக்க ஆஸ்பத்திரிகள்

அரசினர்ஆஸ்பத்திரிகள் எல்லாவற்றிலுமிருந்து கன்னிகாஸ்திரிகளான தாதிமாரின்சேவைகளைப் படிப்படியாக நிறுத்திவிட வேண்டுமென்ற அரசாங்கத்தின் கொள்கையானது, கொழும்பில் ஒன்றும், மாருவிலில் மற்றென்றுமாக இருகத்தோலிக்க ஆஸ்பத்திரிகளைத் திறப்பதற்கான சந்தர்ப்பத்தை அளித்திருக்கின்றது. அரசாங்கமும் இவ்விரண்டுக்கும் அங்கீகாரம் அளித்துள்ளது. கொழும்பிலே ஓர்கத்தோலிக்க ஆஸ்பத்திரியைத் திறக்கவேண்டுமென்றகருத்து அநேகவருடகாலமாக ஆலோசனையில் இருந்துவந்து, கடைசியாக வனதமுல்லையிலே அக்குயினுஸ் சர்வகலாசாலைக்கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை அடுத்தாற்போல அதற்கென்று காணிவாங்கியதிலிருந்து இத்திட்டத்திற்கான ஆயத்தங்கள் செய்யப்படலாயின. இனிமேல் ஊக்கமெடுத்து இந்த ஆஸ்பத்திரியை கட்டியெழுப்புதற்கான காலம்வந்திருக்கிறது.

தற்போதைய திட்டப்படி, 250படுக்கைகளைக்கொண்ட ஓர் ஆஸ்பத்திரியாய் அது இருந்துவரும். அதனைக்கட்டிமுடிக்க 25 லட்சம்ரூபாவரை செலவுபிடிக்கும். இந்தஆஸ்பத்திரியிலே 50 படுக்கைகளைக்கொண்ட முதலாவதுபகுதியைப் பூர்த்திசெய்ய நான்குமுதல் ஐந்துலட்சம்ரூபாவரை செலவாகும். 'பாத்திமா ஆஸ்பத்திரி' என அழைக்கப்படவிருக்கின்ற இந்தஆஸ்பத்திரி வறியவர், நடுத்தரத்தினர், செல்வர்ஆதியாம் சகலவகுப்பினரையுமேஏற்று வைத்தியசிகிச்சை அளிக்கும். இவர்களெல்லாம் கன்னிகாஸ்திரிமாராலும், அவர்களது கண்காணிப்பிலுள்ள தாதிமாராலும் பரிகரிக்கப்படுவார்கள். தற்சமையம் இந்தஆஸ்பத்திரியைக் கட்டுதற்குத்தேவைப்படும்பணம் அதிவண. பீற்றர்பிள்ளைசுவாமிகளைத் தலைவராகக்கொண்ட "பாத்திமாஆஸ்பத்திரிநிதி"ச்சபையால் சேகரிக்கப்பட்டுவருகிறது.

இரண்டாவதான மாருவில் ஆஸ்பத்திரி சிலாபமேற்றிராசனத்தில் அமைக்கப்படவிருக்கின்றது. இதுவிஷயமாய்ச் சிலாபமேற்றிராணியார் "கத்தோலிக்க ஆஸ்பத்திரி"எனும் தலையங்கத்துடன் மேய்ப்பர்நிருபம்ஒன்று விடுத்திருக்கின்ருர். குருநாகலிலுள்ள ஆஸ்பத்திரியிலிருந்து சென்றமாசிமாத இறுதியிலே விடுவிக்கப்பெற்ற திவ்வியஇரட்சகர்சபைக்கன்னிகாஸ்திரிமாரை இலங்கையிலேயே நிறுத்திவைப்பதற்கும், தாம்தொடக்கும்ஸ்தாபனங்களிலே நோயாளருக்கும், துன்பப்படுவாருக்கும் தங்கள் சேவைகளை அவர்கள் தொடர்ந்து நடத்துவதற்கும் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. இந்த அனுமதியின்பேரிலே அவர் தமதுமேற்றிராசனத்திலுள்ள கத்தோலிக்கபிரமுகர்கள் சிலருடன் ஆலோசித்துவிட்டுக்கத்தோலிக்கமாவட்டத்தின் மத்தியிலுள்ள மாருவிலில் ஓர்கத்தோலிக்க ஆஸ்பத்திரியை ஆரம்பிக்கத்தீர்மானித்தார். அதற்கு வேண்டியகாணி ஏற்கனவே பெறப்பட்டுவிட்டது. இதனை அமைக்கும் பணிக்கென்று ஆண்டவர்அவர்கள் அதிவண. பி. சி. பெர்னுண்டோப்பிள்ளை சுவாமிகளைப் பிரத்தியேகமாகநியமித்து, தமதுமேற்றிராசனமக்கள் எல்லோருடையவும் ஒத்துழைப்பைத் தமதுநிருபத்தின்மூலம் வேண்டியிருக்கின்ருர். இந்தக்கத்தோலிக்க ஆஸ்பத்திரிகள்இரண்டிற்கும் கத்தோலிக்க நன்மக்கள் நன்மனங்காட்டித் தம்மாலானதெல்லாம் செய்வார்களென நம்புகின்ருேம்.

---

### ஜி. சி. ஈ. பரீட்சை

வழமையிலே ஆடிமாதத்தில் நடைபெறுகின்ற ஜி. சி. ஈ. எனப்படும் சாதாரணதரப்பரீட்சை இனிமேல் ஆவணி மாதத்தில் நடைபெறவிருக்கின்றது; சென்றமுறை ஆடிமாதத்தில் நடைபெறவேண்டிய இப்பரீட்சை வகுப்புக் கலவரங்கள்காரணமாக ஆவணிமாதத்துக்குப் பின்போடப்பட்டதைத் தொடர்ந்துஇப்பரீட்சையைஇனிமேல் ஆவணி மாதத்திலேயே நடத்துவதற்குக் கல்விப்பகுதி உத்தேசித்துள்ளது இம்முறை இப்பரீட்சைக்குச் சுமார் 75,000மாணவர், மாணவிகள் தோற்றவிருக்கின்ருர்கள்.

## ஆசிரியர்களின் ஞானவொடுக்கம்

வருகிற ஆவணிமாதம் 26-ந் திகதி புதன்கிழமை பின்னேரந் தொடக்கம் 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வரைக்கும் கொழும்புத்துறைத் தாபனத்தில் ஆசிரியர்களின் ஞானவொடுக்கம் நடைபெறும்.

இந்த ஞானவொடுக்கத்தில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் நமக்குக் கூடிய சிக்கிரம் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிருேம்.

PHILIP PONNIAH,
Gen. Manager, R. C. Schools
Jaffna, 27-7-59.

---

## குருத்துவ வெள்ளியூபிலி விழா

கொழும்பு, சஞ்சூசையப்பர் கல்லூரி அதிபரும், பெரும்கலாநிதியுமான அதிவண. பீற்றர் ஏ. பிள்ளை சுவாமியவர்களின் குருத்துவ வெள்ளியூபிலி விழாச் சுபதினமாகிய இம்மாதம் 15-ந் திகதி புதன்கிழமையன்று அதனைக் கொண்டாடுமுகமாக இலங்கையின் ஒவ்வோர் மேற்றிராசனத்திலுமிருந்து பிரதிநிதிகளாகச்சென்ற மிகப்பெருந்தொகையான குருமார்குழு கல்லூரிசென்று ஒன்றுசேரலாயின. அன்று காலையே கொண்டாட்டங்கள் ஆரம்பமாகி நடைபெற்றபோதிலும் அன்றைபவிழாவுக்கு முடிசூட்டும்வைபவமாகப் 10-30 மணிக்கு யூபிலிநாயகர் தமது யூபிலித்தோத்திர பாடற்பூசையை நிறைவேற்றும்வேளை அணமியதும் மணிகள் நாதகீதஞ்செய்து ஆர்ப்பரிக்கவே கொண்டாட்டங்கள் யாவும் நிறுத்தப்பட்டு எல்லோரும் ஓரேதிரளாய்க் கல்லூரிச்சிற்ருலயம் சென்ருர்கள். பரிசுத்தபாப்பரசர் அனுப்பியிருந்த விசேஷ ஆசீர்வாதமும், ஆசிச்செய்தியும் விழாவைப் பரிமளிக்கச் செய்தன. பூசையின்போது வண. ஐஸ்ரின் பெறேரு சுவாமியவர்கள் மனவருட்சிக்குரிய ஓர்பிரசங்கஞ்செய்து, மாட்சிமைவாய்ந்த குருத்துவத்தின் மட்டிலே கல்லூரி மாணவர்களின் கருத்தையும், கண்களையும் ஒருங்கே ஈர்ந்து, கல்லூரி அதிபர் சுவாமியவர்கள் நம்புதற்கே அரிதான தமது பல்வேறு வாழ்க்கையில் சாதித்துள்ளவற்றின் ஈருந்த வியாக்கியானம் குருத்துவமேயெனச் சுட்டிப்பாகக் காட்டிநின்ருர். பூசையின்பின் தரிசகர்களில் அதிகமானேரும், குருமாரும், சாதாரண கத்தோலிக்க பிரமுகர்களும் யூபிலிநாயகரைச் சந்தித்துச் சோபனங் கூறினுர்கள்.

பிற்பகல் 1 மணிக்கு மகாமேன்மை தங்கிய அதிமேற்றிராணியாண்டவரின் தலைமையிலே விருந்து ஆரம்பமாயிற்று. அதிலே பல்வேறு மேற்றிராசனங்களின் பிரதிநிதிகள் பேச்சுநிகழ்த்தினுர்கள். அதிமேற்றிராணியார் தாம் நிகழ்த்திய பேச்சிலே யூபிலிநாயகருக்கு மகத்தான பாராட்டுரை வழங்கலாயினர். பீற்றர்பிள்ளை சுவாமியவர்கள் அளித்தபதிலிலே, ஒவ்வோர் குருவானவரினதும் வாழ்க்கையின் ஏகஅலுவல் கிறீஸ்துநாதருடையவும், அவரது திருச்சபையினுடையவும் நலன்கருதி உழைப்பதே எனக் கூறலாயினர். அதன்மேல் பிற்பகல்முழுவதும் கொண்டாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றன. ஆசிரியர்களும், மாணவர்களும் விளையாட்டுகளில் கலந்துகொண்டார்கள். ஈற்றில் பரிமளிப்பான ஓர் உபசாரணையுடன் விழா நிறைவாயிற்று.

# அங்கும் இங்கும் சுதேச வர்த்தமானம்

### பேராபத்தை உண்டுபண்ணும்

"பாஷைக்கொள்கையை இப்போதாவது மாற்றியமைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். 1958-ம் ஆண்டு வைகாசிமாதம் நடைபெற்ற கொலை, கொள்ளை போன்றவைகளுக்குப் பின்னராவது இப்பிச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும். நாட்டிலே சிங்களவர் – தமிழருக்கிடையே ஐக்கியத்தை வளர்க்க முன்வரவேண்டும். பாஷைக் கொள்கையை மாற்றியமைப்பதன் மூலந்தான் நாட்டில் ஐக்கியத்தை வளர்க்கமுடியும். வகுப்புவாதத்தை வளர்ப்பதற்குப்பதிலாக நாட்டில் ஐக்கியத்தை வளர்க்கப் பாடுபடவேணடும், இன்று வகுப்புவாதம் வேறுதிசையில் திருப்பப்பட்டுவருகிறது. அதாவது, சமயத்துறையில் கத்தோலிக்க திருச்சபைக்குஎதிராகப் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இது பெரும் ஆபத்தை உண்டுபண்ணும்."

**திரு. வி. ஏ. அழகக்கோன்,**
மன்னர் எம். பி.

### அரசாங்கம்செய்த பெருங்குற்றம்

"அரசாங்கம்பதவிக்குவந்தபொழுது மக்களிடையே அபரிமிதமான நல்லெண்ணம் குடிகொண்டிருந்தது. ஆனால், பிந்தஅது காலந்தோறும் தனது செல்வாக்கைப் படிப்படியாக இழந்துவிட்டது. தனிச்சிங்கள சட்டத்தை நிறைவேற்றி இனஅடிப்படையிலே சிறுபான்மையினர் – பெரும்பான்மையினரிடையே இனவேற்றுமைகளைச் சிருட்டித்தமைதான் அரசாங்கம் செய்த பாரதூரமான குற்றம். தனது ஆயுள்காலம்வரையாவது அது நிலைத்திருப்பது துர்லபமாயிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே மக்களின் அத்தியாவசிய தேவைகளை அரசாங்கம் பூர்த்திசெய்யத் தவறியதாலேயே நான் இப்படிக் கூறுகிறேன்."

**திரு. சி. குணவர்த்தன,**
களுத்துறை எம். பி.

### இவர்கள் அதிகாரத்துக்கு வந்தால்!

"இப்போதைய எதிர்க்கட்சித் தலைவர்களில்சிலர் அதிகாரத்துக்கு வந்தால் வாக்குச்சீட்டுகளின் பலத்தில் அல்ல, ஆனால், குண்டுகளின் பலத்தில்தான் தங்கியிருப்பார்கள். சிலர் உண்மையிலே இல்லாத ஓர்கற்பனஉலகை வாக்களித்துப் பாமரமக்களை மூடராக்குகின்றனர். ஆனால், இவர்கள் அதிகாரத்துக்குவந்தால் குண்டுகளின் உதவியோடுதான் ஆட்சி நடத்துவார்கள். பணம் படைத்த முதலாளிகளென்று கதறிக்கூச்சலிடுகின்ற சிலர் தாங்களே பெரும்பணம்படைத்தமுதலாளிகளாய் இருக்கின்றனர். இவர்கள் தொழிலாளர் வகுப்புகளின் தலைவர்களென்று தங்களை அழைத்துக்கொள்ளுகின்றனர். வீட்டிலே இவர்கள் முதலாளிகள். வீதியிலே ஜனநாயக வாதிகள். ஆனால், மேடைகளிலே சோஷலிஸ்தர்கள். இருதயத்திலோ இவர்களெல்லாம் பகட்டான பேச்சினால் மக்களை ஏமாற்றுகிறவர்கள்."

**திரு. ரி. பி. இலங்கரத்தின,**
உள்நாட்டு மந்திரி

### விவசாயியும் துறைமுகத் தொழிலாளியும்

"இப்பகுதிகளில்வாழும் ஏழை விவசாயிகள் போதியவருவாயின்றித் தங்கள் குடும்பங்களைப் பராமரிக்க வகையின்றித் திண்டாடும்பொழுது கொழும்புத் துறைமுகத்திலுள்ள தொழிலாளர்கள் தாங்கள்பெறும் கொழுத்தசம்பளங்கள் போதாவென்றுகூறி, மேலும் மேலும் சம்பளத்தைக் கூட்டவேண்டுமென்று போராடுகிறார்கள். இவர்களின் நியாயமற்ற கோரிக்கைகளினால் நாட்டின் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது."

**ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி,**
மூதூர் எம். பி.

### திரு. பிலிப் குணவர்த்தனவின் சூழ்ச்சி வெளியாகின்றது

"இலங்கையிலே தனிச்சிங்கள சட்டத்தைக்கொண்டுவந்து தமிழ்–சிங்கள மக்களிடையே பெரும்பிளவை உண்டுபண்ணுவதற்குப் பேருதவியாயிருந்த பிலிப் குணவர்த்தன அவசியம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் இரண்டாகும். இன்றைய அரசாங்கம் ஓர் முதலாளித்துவ அரசாங்கமே என்ற ஒருபாடத்தை அவர் இப்போது படித்துவிட்டார். தமிழ், சிங்கள, இஸ்லாமிய மக்களை ஒன்றுபடுத்துவதன் மூலந்தான் இந்தநாட்டில் முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்ட முடியுமென்ற பாடத்தை அவர் இன்னுமே படிக்கவில்லை. இதனை உணராத காரணத்தினால்தான் அவர் கத்தோலிக்க மதத்தினருக்கு எதிரான பிரசாரத்தைத்தொடக்கி இந்தநாட்டின் பெரும்பான்மை மதத்தவரான புத்தசமயத்தவரின் உதவியுடன் முன்னுக்கு வந்துவிடலாமென்ற தப்பெண்ணம் கொண்டிருக்கிறார்."

**திருமதி விவியன் குணவர்த்தன,**
**கொழும்பு வடக்கு எம். பி.**

### தமிழன் ஒன்றுபடவேண்டும்

"இலங்கைவாழ் தமிழர்கள் அயர்லாந்து மக்கள் நடத்திய வீரப்போரை நினைவுறுத்தவேண்டும், ஐரிஷ்மக்கள் தங்களிலும் பலம்வாய்ந்த பெரியஏகாதிபத்தியத்தைத் தாங்கிநின்ற பிரித்தானியை எதிர்த்துச் சுதந்திரம் பெற்றார்கள். அவ்வாறே தமிழ்மக்களும் ஒன்றுபடவேண்டும். சிங்களஅரசாங்கம் சீர்குலைந்து ஐக்கியமில்லாது திண்டாடும் வேளையில் தமிழன் ஒன்றுபடவேண்டும். இதுதான் தருணம்."

**திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்,**
காங்கேசன்துறை எம். பி.

### நல்லபாடம் படிப்பிக்கப்படும்

"இனப்பிரச்சினை, மதப்பிரச்சினை, பாஷைப்பிரச்சினை என்ற துவேஷத்தைச் சிலஅரசியல்வாதிகள் தூண்டிவிட்டுப் பதவிகளைப் பாதுகாப்பதில அக்கறைகாட்டிவருகின்றார்கள். இவர்களின் வெளிவேடங்களை மக்கள் உணர்ந்துவிட்டார்கள். எதிரே வரும் தேர்தலில் இவர்களுக்கு நல்லபாடம் கற்பிக்கப்படுமென்பதில் சந்தேகமில்லை. எஸ். எஸ். சி பரீட்சையில் சித்தியடைந்த வாலிபர்ஒருவரை மஸ்கேலியாத் தொகுதிக்கு நிறுத்தத் தீர்மானித்துள்ளோம் என்பதை இங்கு உறுதிப்படுத்துகிறோம்."

**திரு. ஹில்டன் ஜெயதிலகா,**
எஸ். எஸ். சி. சித்திபெற்ற
மலைநாட்டு மாணவர்கள் சங்கத்தின்
பொதுக்காரியதரிசி.

### அரசியற்சுதந்திரம் பெறவேண்டுமானுல்

"இன்றையஅரசாங்கம் தமிழர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கின்றது. இந்தநிலையில் தமிழர்கள் தூங்கிக்கொண்டிராமல் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். முயற்சிப்பட்டுப் பொருளாதாரத்தை வளப்படுத்தவேண்டும். வாலிபர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் பதுங்கிக்கொண்டிருந்தால்வாழ்வுசெழிப்புறாது. பிறவட்டாரங்களுக்குச் சென்று தொழில்களில் ஈடுபடவேண்டும். வவுனியா, மன்னார், முல்லைத்தீவு போன்ற இடங்களில் சென்றுகுடியேறி விவசாயஞ்செய்யவேண்டும். இவ்வாறுசெய்வதால் தங்களுக்கும் நன்மைசெய்து, மற்றவர்களுக்கும் உதவிசெய்கிறார்கள். தமிழர்கள் அரசியல் சுதந்திரம் பெறவேண்டுமென்றால் பொருளாதாரத் துறையில் சுபீட்சம்அடையவேண்டும், பட்டினியால்வாடும்ஒருவரால் சண்டை செய்யமுடியாது."

**திரு. வி. என். நவரத்தினம்,**
சாவகச்சேரி எம். பி.

### ஆசீர்வாதப்பர்சபை அதிசிரேஷ்டர்

இலங்கையிலே சில்வேஸ்தர்–ஆசீர்வாதப்பர்சபைக் குருமாரின் சுப்பீறியர்–மேஜரான அதிவண. டி. ஜீ. போப்புஸ்சுவாமியவர்கள் தமதுசபைப் பொதுச்சங்கத்துக்குச் சமுகமளிக்கு முகமாகச் சென்றவியாழக்கிழமை 'குவான்ரஸ்'எனும்கப்பலிலே றோமாபுரிக்குப் பயணமாயினர். இப்பொதுச் சங்கம் ஆறுவருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்றது. இச்சங்கத்தில் தான் மடாதிபர் – ஜெனறலும், பல் வேறுநாடுகளின் சிரேஷ்டர் – மேஜர்களும் ஆறுவருடங்களுக்கு ஒருமுறை தெரிவுசெய்யப்படுகின்றார்கள். சுவாமியவர்கள் றோமாபுரியிலே தமதுகடமையை முடித்துக்கொண்டு, இங்கிலாந்திலும், ஏனையஐரோப்பியநாடுகளிலுமுள்ள ஆசீர்வாதப்பர்சபைச் சந்நியாச ஆச்சிரமங்கள் பலவற்றைத் தரிசித்துக்கொண்டு வருகிறகார்த்திகைமாதம் மறுபடியும் இலங்கைவந்து சேருவாரென அறிகின்றோம்.

### 1960-ம்ஆண்டின் திருயாத்திரைகள்

அடுத்துநிகழும் 1960-ஆண்டிலே இலங்கையிலிருந்து பரிசுத்தநாட்டுக்கும், மற்றும்ஐரோப்பிய திருசேத்திரங்களுக்கும் இருதிருயாத்திரைகள் நடைபெறவிருக்கின்றன. இவற்றிலே முதலாவதுதிருயாத்திரையில் 25பேரைக்கொண்ட கோஷ்டிஒன்று அவ்வருடம் சித்திரைமாதம்11-ந்திகதியன்று ஆகாயவிமானத்திலே கொழும்பிலிருந்து புறப்பட்டுப் பரிசுத்தநாடு, றோமாபுரி (பாப்பரசரின் பேட்டி) வெனிஸ், ஆஸ்திரியா, மூனிஜ்(ஜேர்மனி) ஜெனிவா (சுவிற்சர்லாந்து) லூர்து, பரிஸ், லிஸியே, நெவேர்ஸ் (பிரான்ஸ்)லண்டன், மற்றும்ஐரோப்பாவின் நகர்கள்பலவற்றைத் தரிசித்துக்கொண்டு திரும்பும். இரண்டாவது யாத்திரைக்கோஷ்டி அவ்வருடம் ஆனிமாதம்11-ந்திகதியன்று இலங்கையிலிருந்து கப்பல்மார்க்கமாகப் புறப்பட்டு, நேப்பிள்ஸ் (இத்தாலி) நகர் போய்ச்சேர்ந்து, றோமாபுரி(பாப்பரசரின்பேட்டி)ஆஸ்திரியா, ஜேர்மனியிலே திருப்பாடுகளின்காட்சிக்குப் பெயர்பெற்ற ஓபெறாமர்கோ, சுவிற்சர்லாந்து, லூர்து, பரிஸ், லண்டன், மற்றும் ஐரோப்பாவிலுள்ள பிரசித்திபெற்ற இடங்களைத் தரிசித்துக்கொண்டு திரும்பும்.

### யாழ்ப்பாணத்துக்கு நிலக்கரிக்கப்பல்கள்

கொழும்புத்துறைமுகத்தில் தற்போதுள்ள நெருக்கடியைச் சமாளிக்குமாறு நிலக்கரிக்கப்பல்களை யாழ்ப்பாணத்துக்குத் திருப்பிவிடுவதற்குத் துறைமுகக்கோர்ப்பறேஷன் ஒழுங்கு செய்கின்றது. சென்றவெள்ளிக்கிழமை றெயில்வேஅதிகாரிகளின் கோஷ்டி ஒன்று யாழ்ப்பாணம்வந்து இங்கே கப்பல்களிலிருந்து நிலக்கரியை இறக்குவதற்குள்ளவசதிகளை ஆராய்ந்துபோயிருக்கின்றது. தற்போது கொழும்புத் துறைமுகத்திலே 20,000முதல் 25,000தொன் நிலக்கரியையிறக்குவதற்குக் கப்பல்கள் காத்துக்கொண்டுநிற்கின்றன.

### 'சிங்களம்மட்டும் பிரேரணை'

மாத்தறைப் பட்டினசபையின் அலுவல்கள் சிங்களமொழியில் நடைபெறவேண்டுமெனச் சென்ற25-ந்திகதியன்று அச்சபைக்கூட்டத்திலே கம்யூனிஸ்த அங்கத்தவர் கொண்டுவந்தபிரேரணை தோல்வியடையலாயிற்று. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் இருவரும், ஐக்கியதேசியக்கட்சி அங்கத்தவர்களும் பிரேரணையைஎதிர்த்து வாக்களித்தார்கள்.

### தமிழ் டிப்புளோமாப் பரீட்சை

இலங்கைச் சர்வகலாசாலையில் சென்றசித்திரைமாதம்நடைபெற்ற தமிழ்டிப்புளோமாப்பரீட்சையில் திருவாளர்கள் எஸ். அடைக்கலமுத்து, கே. கணபதிப்பிள்ளை, என். நாகலிங்கம், எம். சி. எம். சலீத், கே. செபரத்தினம், டி. செல்வத்துரை எனும் அறுவரும் சித்தியடைந்திருக்கின்றார்கள்.

### சிங்களம்மட்டும்சட்டம்

அரசாங்கபகுதிகளிலே சிங்களம் மட்டும்சட்டத்தைத் தீவிரமாக நடைமுறைக்குக்கொண்டுவரும் வேலைகளை அரசாங்கம் இப்போது செய்துவருகின்றது. ஒவ்வோர் அரசாங்கபகுதியிலும் இதுவரை ஆங்கிலத்தில் நடைபெற்றுவந்த வேலைகளை இனிமேல் சிங்களத்தில் அதாவது—உத்தியோக மொழியில் நடத்தும்படி உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. உயர்தர அதிகாரிகளிடமிருந்து கிடைக்கும் ஆங்கிலகடிதங்களுக்குத்தானும் சிங்களத்திலே பதில்எழுதவேண்டுமென்று அரசாங்கபகுதிகளிலுள்ள அரசாங்க ஊழியர்கள் கேட்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது அதனால் அதிகமான அரசாங்கபகுதிகளில் சிங்களமொழியில் வேலைசெய்யக்கூடிய ஊழியர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

### புத்தபிக்குகளின் வேண்டுகோள்

அரசாங்கசேவையிலுள்ள சகல உயர்பதவிகளுக்கும் புத்தர்களையே நியமிக்கவேண்டுமென்று 'ஸ்ரீலங்கா எக்ஸத் சமாஜவாதி பெரமுனே' என்ற பிக்குகளின் ஐக்கியமுன்னணி பிரதமரைக்கேட்டிருக்கிறது. பொலிஸ் இன்ஸ்பெக்றர் – ஜெனறல் திரு. எம். டபிள்யு. எவ். அபயக்கூனின்நியமனம் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்றும், இராணுவதலைவர்பதவிக்கும், கவர்னர்–ஜெனறல் பதவிக்கும் புத்தர்களைத்தான் நியமிக்கவேண்டுமென்றும், மற்றும் அரசாங்க உயர்பதவிகளுக்கெல்லாம் புத்தர்களை நியமனஞ்செய்வதே அரசாங்கத்தின்கொள்கையாய் இருக்கவேண்டுமென்றும் இந்தப்பெரமுனைக் காரியதரிசியான புத்தகுரு பிரதமருக்குஎழுதியுள்ள ஓர்கடிதத்தில் கோரியுள்ளார். கவர்னர்–ஜெனறல் சேர் ஒலிவர் குணதிலகாஅவர்களின் பதவிகாலம் சிலதினங்களின்முன் முடிவடைந்ததென்றும், தற்போதைய இராணுவதலைவர் பிறிகேடியர் அன்ரன் முத்துக்குமாருஅவர்கள் ஒரு புத்தர்அல்ல, அவருடையபதவிகாலம் அடுத்தமார்கழியிலே முடிவடைகிறதென்றும் அக்கடிதத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### அதிகரிக்கும் கள்ளக்குடியேற்றம்

இவ்வருடத்தின் முதல் ஆறுமாதங்களிலும் வடக்குக் கடற்கரையிலே கைதுசெய்யப்பட்ட கள்ளக்குடியேற்றகாரர்தொகை முந்தியவருட ஆறுமாதங்களிலும்பார்க்க அதிகரித்திருப்பதாய்ப் பொலிசர் அறிவிக்கின்றனர். சென்ற முதல்வருட ஆறு மாதங்களிலும் கைதுசெய்யப் பட்டவர்கள் தொகை 842. இவ்வருடத்தின் முதல் அரைவருடத்திலும் 1,224.

---

**BUILDING SITE FOR SALE.**

Offers are invited for the purchase of land over 7 Lachchams V. C. in two lots near Seerappar Madam on Keerimalai-Kankesanthurai Road. Plan may viewed and particulars obtained at Malayan Ceylonese Association No. 54, Jummah Mosque Lane, Jaffna between 10 a. m. and 1 p. m. on week days or from Mr. T. Chelliah, Commissioner of Courts Sale and Valuer No. 37, Colombogam Road, Chundikuli, Jaffna.

T. Chelliah.

# கேரள அரசாங்கத்தின் பதவிகாலம் குறுகுமா?

"மக்களின்சக்தி பொங்கிஎழுந்தால், அதன்முன் எல்லாம் சாம்பல்ஆகிவிடும்" என்பது கம்யூனிஸத்தந்தை காள்மாக்ஸ் தந்த தத்துவம். இதைநம்பியே அகில உலகிலும் கம்யூனிஸ்தர்கள் "மக்களின் சக்தி"யை அரசியல்புரட்சிக்குப் பயன்படுத்தி வருகின்றார்கள். ஆனால், கேரளாவில் மக்களின்சக்தி மாற்றுக் கட்சிகளை அல்ல, கம்யூனிஸ்தகட்சியையே சாம்பலாக்கிவருகிறது.

வீரகேரளமக்களின் வீறுகொண்ட எழுச்சி கடந்தஒருமாதத்துக்குமேல் நாளுக்குநாள்வளர்ந்து உச்சஸ்தாயை அடைந்துவருகிறது. இதுவரை 17 பேர் உயிரையே அர்ப்பணம்செய்திருக்கின்றனர். 65,000ஆண்களும், பெண்களும் பணம், பதவி, பால், பவிசுஎதையுமே சுதந்திரத்திற்கு ஈடாகஎண்ணாமல் சிறைசென்றிருக்கின்றனர். கம்யூனிஸ்தர்கள் எவ்வளவுதான் ஆத்திரமூட்டும் அட்டூழியங்களைச் செய்தாலும், அமைதிகுலையாத அறப்போர் நடத்துகின்றனர். ஒருகம்யூனிஸ்தாவது உயிர்இழக்கவில்லை.

மேலும் சட்டசபை, ஸ்தலஸ்தாபனங்களுக்கென மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற மொத்தம்6,000பேர்களில் 4,000பிரதிநிதிகள் ஒன்றுகூடிப் பதவியை இராசினாமாச்செய்து, கேரளஅரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்யப் போகின்றனர். மேலும் வரிகொடாஇயக்கமும், அரசாங்கத்துக்குக் கொடுத்திருக்கும் கடனை உடனடியாக வாபஸ்பெறும் இயக்கமும் தொடங்கவிருக்கின்றன. என்னே மக்களின் சர்வசக்தி! சாத்வீக ஐக்கிய முன்னணியின் அாண்மிகும்வெற்றி!

பொங்கியெழுந்த பொதுமக்களின் பிரமாண்டமானஎதிர்ப்பை அரட்டல், மிரட்டல், துப்பாக்கிமுனை எல்லாவழிகளிலும் அடக்கமுயன்று படுதோல்வி கண்ட கம்யூனிஸ்தஅரசாங்கமும், கட்சித்தலைவர்களும் அடுத்துஅடுத்தெடுத்தனர் காவடி டில்லிக்கு. பூசி மெழுகும் பொய்ப்பிரசாரம் அங்கு பலிக்கவில்லை. "மறுதேர்தல் நடாத்துவதுதான் ஒரேவழி"என்று கூறப்பட்டது.

பதவியிலிருந்து "டிஸ்மிஸ்"உத்தரவு நின்றுவரலாம். ஆனால், நிச்சயமாக வருகிறதென்று அறிந்த கேரளகம்மி அரசாங்கம் "டிஸ்மிஸ்"செய்யப்பட்டால் குற்றவாளிகள்என்ற கெட்டபேர் நிலைத்துவிடும்; மாறாக, நாமாகவே விலகிக்கொண்டு நல்லபேர் எடுத்துக் கொள்ளலாம்என்று பதவியில்இருந்து விலக வழிவகைகளை ஆராய்ந்துகொண்டிருக்கின்றது.

ஆனால், குலைதெறிக்கஓடும் குள்ளநரி, பின்தொடர்பவர்களைத் திணறடிப்பதற்காக விஷப்புகையைவிட்டுச் செல்லுவதுபோல், கேரளஅரசாங்கம் குண்டர்களின்ஆட்சியைப் பரப்பிவருகிறது. தனக்குப் பாதகமான பொது அரசாங்கபத்திரங்களை எல்லாம் கையாடல்செய்கிறதாம். பொதுப்பணத்தை என்னசெய்கிறதென்று தெரியவில்லை.

இராசினாமாச்செய்யும் நாளைத் தள்ளிப்போட்டு இடையிலே கிடைக்கும்காலத்தில் எதிர்காலத்திற்கேற்ற குதர்க்கதிட்டங்களை வகுத்துவருகிறது. அவற்றில்சில, மறுதேர்தலில் தாங்களேதலையிடாது விலகிநின்று, இன்று ஒன்றுபட்டுநிற்கும் சர்வகட்சிகள்மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துவது. அதேநோக்கில் அகிலஇந்தியாவிலும், குறிப்பாகப் பஞ்சாப், வங்காளம், தமிழ்நாடுமுதலிய இராச்சியங்களில் கம்யூனிஸ்தகட்சியின் குழப்பசக்தியை வளர்த்துக் கிளர்ச்சியைப்பெருக்குவது. பொய்ப்பிரசாரங்களால் பிறகட்சிகள்மீது பழியைச்சுமத்திப் பொது மக்கள்முன் நல்லபேரைச் சம்பாதித்து, 1962-ம்ஆண்டு வரவிருக்கும்தேர்தலில் திரும்பவும்போட்டியிடுவது என்றவாறு.

நமது தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், இப்பொழுதிலிருந்தே கம்யூனிஸ்தகுழப்பங்கள் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், கேரளாவிற்குக் கிட்டஇருந்து கம்மித்தோழர்களின் கைவரிசையை நன்குஉணர்ந்திருக்கும் தமிழ்மக்கள் அவ்வளவுஎளிதில் ஏமார்ந்துவிட மாட்டார்கள். மேலும், தமிழனுக்கும் உண்மைமீது பற்றுதலும், அக்கிரமத்தின்மீது அருவருப்பும், அறப்போர் நடாத்தும் வீரமும் ஏராளமாகஉண்டு.

கேரளமக்களும் வரும்இடைத்தேர்தலில் ஒற்றுமையாக இருந்து சுதந்திர ஜனநாயகத்தை நிலவச்செய்து, கம்யூனிஸ்தர்களின் வண்டவாளங்களை எல்லாம் அம்பலப்படுத்திக் கம்யூனிஸம் இந்தியநாட்டிலே வேரூன்றாதவாறு உண்மையைப்பரப்பத் தீர்மானித்திருக்கிறார்கள். சத்தியமேவ ஜெயதே!

வண. சி. ம. விசுவாசம் சுவாமிகள்,
கத்தோலிக்கசேவை ஆசிரியர்.

# கம்யூனிஸ்த தலைவராம், கடவுள் நம்பிக்கையாம்!

காலத்துக்கேற்ற கோலம், நேரத்துக்கேற்ற நிறம், ஆளுக்குத்தகுந்த அச்சாரம்போடுவதில் கம்யூனிஸ்ததோழர்கள் தலைசிறந்தவர்கள். இதற்கு ஓர்எடுத்துக்காட்டு நம்கேரளநாட்டு நம்பூதிரியார். அவர் இம்மாதம் 11-ந் திகதி சிம்லாவில் நேருமாமாவைக் கண்டுபேசினார். மாமாவின்மனதை மாற்றமுயன்றார். உருத்திராட்சப்பூனைபோல் போலிநடிப் புநடித்தார். அந்தப் போலிநடிப்பின் ஊடே அவர்வாயில் கடவுள்பெயரும் அடிபட்டது. கம்யூனிஸ்தர்கள் நாஸ்திகர்கள். அவர்கட்குக் கடவுள்நம்பிக்கையே கிடையாது. எனினும், தமக்குக் கடவுள்நம்பிக்கை இருப்பதுபோல் நம்பூதிரியார் ஒருநடிப்பு நடித்துவிட்டார்: "கேரளாவில் வருங்காலம் கடவுள் கையில் இருக்கின்றது."

அடுத்தநாள் டில்லியில் பத்திரிகை நிருபர்கள் அவரை ஒருமாட்டுமாட்டினர். "ஐயா! கேரளாவின் வருங்காலம் கடவுள்கையில் இருக்கின்றது என்று சிம்லாவில் சொன்னீரே; என்ன இப்போது உமக்குக் கடவுள் நம்பிக்கை உண்டாகிவிட்டதா?" நம்பூதிரியார் மீண்டும் வேஷம்போட்டார். பதிலுரைத்தார்: "அதை நீங்களே சொல்லுங்கள். அனைத்துலகினதும் வருங்காலமே கடவுள் கையில் இருக்கிறது."

ஆஹா! என்ன ஒருபக்தி! இந்தப் பூனையும் பால் குடிக்குமா? நன்றாகக் குடிக்கும். பாலும் குடிக்கும், புலாலும் உண்ணும். அதைப்பற்றிக் கீழே:

நம்பூதிரி பிராமணராம், நன்றாகக் கறி உண்டாராம். மரக்கறியல்ல, மாமிசக்கறி!

"சிம்லாவில் பிரதமர்நேரு எனக்கு அளித்தவிருந்தை ஒருசாதாரண மலையாளப்பிராமணர் சாப்பிடமாட்டார். ஆனால், நான் அதை மிகவும்சுவைத்து உண்டேன்"என்றார். அன்று ஞாயிறன்று டில்லிச் செய்தியாளரிடம் திரு. நம்பூதிரிபாத் "சிம்லாவில் நேருவுடன் நேற்று என்னய்யா பேசினீர்?"என்ற கேள்விக்கு இதுதான் பதில்மொழி.

"விருந்துதவிர, நம்பூதிரி பிராமணருக்குக் கஷ்மீர்ப்பிராமணர் (நேரு) கொடுத்த தட்சணை என்ன?" என்றார் ஒருசெய்தியாளர். "எனக்கு அளிக்கப்பட்ட விருந்தின் உணவுவகைகளை ஒரு சாதாரண மலையாளப்பிராமணர் சாப்பிடமாட்டார்; மீன், மற்றும் எல்லாவித இறைச்சிவகைகளும் அந்தஉணவுவகைகளில் இருந்தன"என்று நம்பூதிரியார் முன்சொன்னபதிலையே விரித்துரைத்தார்.

"அப்படியானால், நீங்கள்விரும்பாத விருந்தை நேரு உங்கட்கு அளித்தார் என்று சொல்கின்றீரா?"என்று மடக்கினார் மற்றொருசெய்தியாளர். "நான் அப்படிச் சொல்லவில்லையே! அதை ஒருசாதாரண மலையாளப்பிராமணர் சாப்பிடமாட்டார் என்றுதானே கூறினேன். எனக்கு அந்தவிருந்து மிகவும் உருசியாயிருந்தது. நான் புலால்உண்பவன்தான்" என்பது அசாதாரண மலையாளப்பிராமணர் நம்பூதிரியாரின் மறுமொழி.

ஆம், அவர் அசாதாரண பிராமணப் பேர்வழிதான். புலால்உண்பார், உண்டதையெல்லாம் கண்ட இடத்தில் சொல்லிக் கேவலமாகத் தம்பட்டம் அடிப்பார், பொய்சொல்வார், புரட்சி செய்வார், கலகம்மூட்டுவார், கொலை செய்வார், மற்றும்பல அட்டகாசம்புரிவார், அட்டூழியம்செய்வார், முழுப்பூசினிக்காயை இலைச்சோற்றில்மறைப்பதுபோல் எல்லாவற்றையும் ஒழிக்க முயல்வார், எதிர்ப்போரை உதைப்பார். ஆனால், ஒருநாளைக்குச் சரியானஉதை வாங்கிக்கொண்டு வெளியேறிவிடுவார். இந்த அசாதாரண பிராமணருக்குக் கேரளாவில் நேரப்போவது அதுதான். அதற்கு ஆசிவேண்டுமாம்.

"அடுத்த இரண்டரை ஆண்டுகளுக்குக் கேரளமுதலமைச்சராகத் தாங்கள் நீடிக்கமுடியும்என்று நம்புகிறீர்களா?" என்றார் குறும்புத்தனமான ஒருசெய்தி நிருபர். "உங்கள் ஆசிகளுடன் நானும் அப்படித்தான் நம்புகிறேன்." நம்புகிறாராம் நம்பூதிரியார். நன்மக்கள் எல்லாரும் அவருக்கு ஆசிவழங்க முன்வாருங்கள். நாளைக்கே வெளியேறி ஓடுதற்கான நல்லாசியை அவருக்கு வாரி வாரி வழங்குங்கள். இந்த நம்பூதிரியார்? இவர்தான் கேரளமுதன்மந்திரி.

— சர்வவியாபி

## ஓர் கத்தோலிக்கராய் இருந்தால்!

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்குக் கத்தோலிக்கர் ஒருவர் அபேட்சகராகமுன்வந்தால் அவருக்கு வாக்களிப்பதில் பெரும்பான்மையான அமெரிக்கர் ஆட்சேபனைசெய்ய மாட்டார்கள் என்பதைச் சமீபத்தில் அருளப்பட்ட அமெரிக்க பொதுசன வாக்குகள் காண்பித்திருக்கின்றன. அதாவது அடுத்தவருடம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு ஜனநாயக கட்சியின் முதன்மைவாய்ந்த அபேட்சகர்களில் செனற்றர் கென்னடி என்ற கத்தோலிக்க பிரமுகரும் ஒருவராய் இருப்பதையே இது குறிக்கின்றது. "ஜனாதிபதிபதவிக்கு அதிகம் தகுதிவாய்ந்த ஒரு அபேட்சகரை உங்களுடைய கட்சி தெரிவுசெய்தால் — அவர் ஓர் கத்தோலிக்கராய் இருக்க நேர்ந்தால் அவருக்கு நீங்கள் வாக்களிப்பீர்களா?"என்று அங்குள்ள சகல சமயங்களையும் சேர்ந்த ஜனநாயககட்சி வாக்காளர்கள் கேட்கப்பட்டிருந்தார்கள். வாக்கெடுப்பின்விளைவாக அவர்களில் நூற்றுக்கு 68 விகிதமானோர் "ஆம்"என்றும், 24 விகிதமானோர் "இல்லை" என்றும், 8 விகிதமானோர் "தெரியாது" என்றும் பதில் அனுப்பியிருந்தார்கள்.

# சில்லாலையின் வரவேற்பு

சமீபத்திலே யாழ்ப்பாணத்தில் சுற்றுப்பிரயாணஞ்செய்த இலங்கைப்பிரித்தானியபிரதிநிதி திரு. சி. ஆர். டீன் அவர்கட்குச் சில்லாலைச் சனசமூகநிலையம் கடந்தசனிவாரம் ஒருவரவேற்பு உபசாரம் நடத்தியது. இதற்கெனச் சனசமூகமண்டபம்சிறப்பாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. திரு. சி. ஆர். டீன் அவர்கள் வந்துசேர்ந்ததும் மாதகல், ஆங்கிலகலாசாலைஅதிபரும், சில்லாலைக் கிராமமுன்னேற்றசங்க தலைவருமான திரு. என். ஜேம்ஸ்அவர்களும், சில்லாலை மகளிர்முன்னேற்ற சங்கதலைவியான திருமதி பேளி அத்தனாசியாரும் அவரை மலர்மாலைசூட்டி வரவேற்றனர்.

பின்னர் சனசமூகமண்டபத்திலே திரு. ஜேம்ஸ்அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்திலே அவர் பேசுகையில், சனநாயகத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் சனசமூகநிலையங்கள்பற்றிக் குறிப்பிட்டுச் சிறந்த வாழ்வின் வழிகாட்டியான சனசமூகநிலையங்களை நிர்வகிக்க ஆர்வமும், நேர்மையுமுள்ள உத்தியோகஸ்தர்கள் வேண்டுமென்றும், அநேகபெரியோர் சமூகசேவை செய்ய முன்வந்திருப்பதைக்கண்டு தாம்பெருமிதமடைவதாகவும் கூறினார்.

அதன்மேல் யாழ்ப்பாணமாவட்ட சனசமூகநிலையங்களின் தலைவர் அரசவாசல்முதலியார் திரு. சி. தியாகராச அவர்களும், யாழ்மாவட்ட சனசமூகநிலையங்களின் காரியதரிசி முகாந்திரம் ஈ. பி. இராசையா அவர்களும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியபின் தோட்ட உபசரணையில் ஸ்தலஸ்தாபன விசாரணையாளர்கள் திருவாளர்கள் வி. சி. சண்முகம், எஸ். பரஞ்சோதி, சமாச உபகாரிய தரிசி திரு. வ. உ. தேவகடாட்சம், மானிப்பாய்க் கோயிற்பற்றுச சனசமூகநிலைய காரியதரிசி திரு. எஸ். சிவயோகம்என்பவர்கள் கலந்துகொண்டனர். ஈற்றில் தகவல்பகுதிப் படக்காட்சியுடன் வரவேற்பு நிறைவாயிற்று.

— காரியதரிசி

# அருட் செல்வி

## மாசற்ற இருதயமும் மரியாயின் சேனையும்

"லூசியா! நான் ஜசிந்தாவையும், பிரான்சிஸ்கோவையும் சீக்கிரம் கொண்டுசெல்வேன். நீ இங்கேயே கொஞ்சக்காலம் இருக்கவேண்டும். உலகோர் என்னை அறிந்து நேசிக்கப் பண்ணுங் கருவியாக யேசுநாதர் உன்னை உபயோகிக்க விரும்புகிறார். என்னுடைய மாசில்லாத இருதயத்தின்பக்தியை உலகத்தில் ஏற்படுத்த அவர் ஆசையாயிருக்கிறார்." இவை தேவதாயார் தாமாகவே உலகில் தோன்றிக்கூறிய உண்மைகளாம்.

சர்வேசுரன் தமதுதாயாரை உலகுக்கனுப்பிஅறிவித்த இந்தவிருப்பங்களை நிறைவேற்றும் சேவையே மரியாயின்சேனையின் தொண்டுமாகும்.

இன்னும் லூசியா தன்கூட்டாளிகள் மோட்சம்போக, தான் இங்கே இருக்கவேண்டியதைப்பற்றி மனம் வருந்தி, "நான் இங்கே தனியே இருப்பேனு" என்று மாதாவிடம் வினவினுர். மாதா மறுமொழியாக: "இல்லை இல்லைப் பிள்ளாய்! நான் உன்னை ஓர்போதும் கைவிடமாட்டேன். என்னுடைய மாசற்ற இருதயம் உனக்கு அடைக்கலமாகவும், சர்வேசுரனிடம் உன்னைக் கொண்டுபோகும் வழியாகவும் இருக்கும்" என்று கூறினுர்.




மரியாயின் சேனையாளரைத் தேவதாயார் தமது குமாரனின் விருப்பத்தின்படி இத்தொண்டுக்கு அழைத்திருக்கிறுர். அவர்களை விசேஷ வரப்பிரசாதங்களால் நிரப்புகிறுர். அவர்கள் தங்கள் சேவையில் அனுபவிக்கும் துன்பதுயரம், நிந்தனை ஆகிய சிலுவைகளைச் சுமக்கும்போது அவர்களுடன் கூடச்சுமக்கிறுர். அவர்களோடுகூட என்றும் இருக்கிறுர். தமது அடைக்கலத்தில்வைத்திருந்து தமதுவழியாய் மோட்சம்சேர்ப்பார்.

தேவதாயாரிடம் சர்வேசுரன் தமது சம்மனசையனுப்பி யேசுநாதர் அவளிடத்தில் மனுவுருஎடுப்பார்என்று அறிவித்தார். பரிசுத்த கன்னிமரியம்மாளை மனுக்குலத்தின் இராக்கினியாகவும், பிரதிநிதியாகவும் தெரிந்தார். பரிசுத்த கன்னிமரியம்மாள் "ஆண்டவருடைய அடிமையானவள், உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக் கடவது" என்று தமதுசம்மதத்தையும், மனுக்குலத்தின் சம்மதத்தையும் கொடுத்தார்.

யேசுக்கிறீஸ்துநாதரை — நமது இரட்சகரைப்பெற்றுர்; வளர்த்தார். தாமும்கூடச் சிலுவையின் வேதனைகளை அனுபவித்து மனுக்குலத்தின் உடன் இரட்சகியானுர்.

தமது திருக்குமாரனின் ஞானச்சரீரமாகிய மனுக்குலம் தங்கள்சிலுவையைச்சுமந்து சர்வேசுரன் காட்டும் வழியில்நடந்து இரட்சணியத்தை அடையவேண்டியது சர்வேசுரனின் விருப்பமானதினுல், அதை நிறைவேற்றத் தாமாகவே முன்வந்து உலகில்தோன்றி அதை அறிவித்தார்.

நமது திருமீட்பர் சிலுவையடியில் தமதுதாயாரை மனுக்குலத்தின் தாயாரென உறுதிப்படுத்தினுர்.



சர்வேசுரனுடையதாயும், இவ்வுலக இராக்கினியுமாகிய இவர் இப்போது எங்கள் மத்தியட்சியாக இருக்கிறுர்.

தமது குமாரனுக்கு உலகோர் செய்யும் நிந்தையவமானங்களால் இவவுடைய இருதயம் முட்களால் ஊடுருவப்பட்டு இருப்பதுபோல் காயப்பட்டு வேதனை அடைகிறது. இதற்கு நிந்தைப்பரிகாரம் செய்வதும், இதை நேசித்து இதன்பக்தி

( அடுத்தபக்கம் பார்க்க )

### நீங்கள் அஞ்சவேண்டியதில்லை

ஜேர்மனி தேசத்திலிருந்து ரோமாபுரிசென்றயாத்திரிகர்கள் சிலருக்குக் காலஞ்சென்ற 12-ம்பத்திநாத பாபபரசர் கூறியதாவது:

"இன்றையஉலகில் மிகவும்முக்கியமானது விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, அதன்படி உதாரமாய்ச் சீவித்து, தேவதிரவிய அனுமானங்கள்மூலம் கிறீஸ்துநாதருடன் ஐக்கியப்படுவதே.

"எந்தப் பண்பாட்டிலும் — தற்கால நாகரிகத்திலும்கூட — பிரமாணிக்கமுள்ள கத்தோலிக்கனுக வாழ்வதற்கு ஓர்வல்லபம்மிக்க ஆதாரமுண்டு...... இந்தஆதாரம் தேவதாயின் வணக்கமே.

"தேவனின்தாய் உங்களுடன் எப்பொழுதும் இருந்திருக்கிறுள். தமது அரவணைப்பில் உங்களை ஏந்தியிருக்கிறுள். உங்கள் மூதாதையர் உங்களுக்குக்கொடுத்த முதிசமாக அவள் பக்தியைப் பாராட்டுங்கள். மரியாளுக்குப் பிரமாணிக்கமாய் இருங்கள். அப்போது நீங்கள் உங்கள் விசுவாசத்திற்கோ, உங்கள் உண்மையான இன்பத்திற்கோ அஞ்சவேண்டியதில்லை" என்றுர்.

"அவளை விடாதே,
உன்னைக் காப்பாற்றுவாள்.
அவளை அன்புசெய்,
உன்னை ஆதரிப்பாள்.
அவள்அடிகளைப் பற்றிக்கொள்,
உன்னை உயர்த்துவாள்"

## வீரதியாகியின் வாடாமாலை

"டேய்! என்னைப்பார்த்துத்தாண்டா எறிந்தார். பக்கத்திலிருந்தவர்களைக் கேட்டுப்பாரெடா. சத்தியமாய் எனக்குத்தான் கொடுத்தார்."

"அதெல்லாம் முடியாது. இது எனக்குத்தாண்டா. பொய்சொல்லாதடா. மரியாதையாகக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால் இலச்சை கெட்டுப்போகும்" என்று நடுவீதியில் பார்த்தவர்களும்நகைக்குமாறு சப்தமிட்டுக்கொண்டு கைகலக்கும் அளவில் வந்தனர் இருவர். இவர்கள் இருவரும் ஒருசெபமாலையைப் பிடித்துக்கொண்டுதான் மேலேகூறியபடி வாதாடினர். இவர்களில் ஒருவன் கத்தோலிக்கன். மற்றவன் புரொட்டஸ்தாந்தன். சனங்களோ புற்றில் இருந்துஈசல் கூட்டம் கூட்டமாய் வருவதுபோல வாயில் கையைவைத்துக்கொண்டு இக்கண்ணுருவியை யாரிடம் சொல்லுவதுஎன்று பேசிக்கொண்டே வந்தார்கள். எங்கிருந்து வந்தார்கள்? கிளாஸ்கோ ஜெயிலில் கத்தோலிக்க குருவானவர் முத். அகில்வே மரணத்தீர்ப்புப் பெற்றுத் தூக்கிலிடப்பட்ட பரிதாபக்காட்சியைக் கண்டுகொண்டு திரும்பிவந்தார்கள்.

முத். அகில்வே தாம்வேதசாட்சியாகமரிக்கச் சிலமாதங்களுக்கு முன்னர்தொட்டு மெய்மறையைஸ்கொத்லாந்து தேசத்தில் பற்பலஇடங்களிலும்வேகமாய்ப் பரப்பிவந்தார். இதைஅறிந்த கொடூரபதிதரில் சிலர் இவரைப் பிடித்துக்கட்டிச் சிறையில் அடைத்தனர். இதற்குக் காரணமாயிருந்தவன் கத்தோலிக்கனுகிவிடுவதாய் வாக்களித்துவிட்டுப் பின்னர் யூதாசைப்போல் அவரைமுத்தமிட்டுக் காட்டிக்கொடுத்த ஒரு துரோகி தம்மைச் சிறையில் அடைத்த நாள்முதல் தாம்வேதசாட்சியாவது திண்ணம்என்றுகுருவானவர் உணர்ந்திருந்தார். அவர் சிறையில் அனுபவித்த வேதனைகள் அனந்தம். சில சமயம் சாப்பாட்டிற்குப் பதில்உதையும் மிதியும் தான். சிலவேளைகளில் அவர் செபப்புஸ்தகத்தைஎடுத்து வாசிப்பதைக்கண்டால் உடனே அதைப்பறித்துக் கீழே எறிவார்கள். ஒருசமயம் இவர் ரோமையிலிருந்த அதிசிரேஷ்டர் வண. கிளாட் ஆக்வாவீவா சுவாமியாருக்கு இரகசியமாய்எழுதிய கடிதத்தில் "என் முதுகின்மேல் 200ருத்தல் பாரமுள்ள இரும்புத்துண்டை வைத்திருந்தார்கள். நம்வேதத்தை மறுதலித்தால் அநேகசன்மானங்கள் கிடைக்குமாம். சிலநாட்களுக்குமுன் 9இரவும், 8பகலும் எனக்குத் தூக்கமின்றி நகக்கண்களில் ஊசியைக் குத்தி வைத்திருந்தனர். இன்னும் சித்திரவதைகள்சிலகாத்துக்கொண்டிருக்கின்றன. அதன்பின் இவ்வுலகைவிட்டு மறுஉலகம் செல்லும் நாள்அடுத்திருக்கிறது" எனக்காணக்கிடக்கிறது. இவ்வாருக முத். அகில்வே மெய்ம்மறைக்காக வேதனைகள் அனுபவிக்கச் சர்வேசுரன் சித்தமானுர்.



இவர் புரொட்டஸ்தாந்த மதத்தில் பிறந்துவளர்ந்து, லுவேய்ன்நகரில் படித்துவருங்காலம் தம் 16—ம்பிராயத்தில் மெய்ம்மறைப்புத்திரரானுர். 1599—ம் ஆண்டு யேசுசபையிலுட்பட்டு 1610—இல் குருப்பட்டம்பெற்றுர். அநேகமாய்ச் சகல அர்ச்சியசிட்டர்களும் தங்கள்சீவியத்தில் தேவதாய்க்கு விசேஷசங்கைகாட்டிவந்தனர்என்பது சரித்திரவாயிலாக அறியக்கிடக்கும் உண்மை. அவ்வண்ணமே முத். அகில்வேயும் தேவதாயைத் தமதுதாயாகக் கருதிவந்தார், செபமாலைஎன்றுல் உயிரைவிடுவார். தம் ஆயுட்காலமெல்லாம் அதைத் தமது உயிரேபோல் பேணிவந்தார். செபமாலையின் மகத்துவத்தை அறிந்தநாள்முதல் தினமும் வெகு உருக்கமாய் ஐம்பத்துமூன்றுமணிச் செபம் சொல்லாமல் படுக்கைக்குச் சென்றவரல்ல. இவர் சிறையில் அடைபட்டிருந்த காலத்தில் இடைவிடாமல் செபமாலை சொல்லிவந்தார். இவ்விதம் மாதாபக்தியின் மூலம் வேதத்திற்காகத் தமதுஉயிரையே தியாகமாக்கும் தீரஎண்ணத்தையும், அதற்கான தைரியத்தையும் அடைந்தார். தம்மைத் தூக்கிலிடப்போவதாகச் சொன்னவுடனே இவருக்குண்டான சந்தோஷம் உரைக்குந்தரமன்று. இச்செய்தியைக் கொண்டுவந்தவனைக் கட்டித்தழுவி அவனுக்குத் தம்நன்றியைச் சமர்ப்பித்தார் என்றுல்.........

1615-ம் ஆண்டு பங்குனிமாதம் 10-ந்திகதி தூக்கிலிடப்படும்நாள். அந்நாளும், நேரமும் வந்தன. வெகு கெம்பீரத்துடனும், உற்சாகத்துடனும், புன்முறுவலுடனும் தூக்குமேடையை அணுகினுர். அங்கு தம்மைப்பார்க்கவென்று கூட்டங்கூட்டமாக வந்திருந்தவர்களை நோக்கி: "இதோ பாருங்கள், நான் ஒரு கத்தோலிக்க குரு. இவ்வந்தஸ்தில் இருப்பதால் இப்போது என்உயிரைத் தியாகஞ்செய்கிறேன். இதனுல் எனக்குண்டாகும் இன்பஊற்றைச் சர்வேசுரன்தான் அறிவார்" என்று சொல்லிக்கொண்டே ஒரு ஏணியில்ஏறித் தமதுகழுத்தை யந்திரத்தில் வைக்குமுன் ஓர்சிறியசெபஞ் சொல்லித் தமது செபமாலையைக் கையிற்பிடித்துக்கொண்டார். பின்னர் தூக்கிலிட இமைப்பொழுதிற்கு முன் வாயில் கையைவைத்துக் கொண்டு தம்மை உற்றுநோக்கிக் கொண்டிருந்த கூட்டத்தின்மேல் தமதுசெபமாலையை எறிந்துவிட்டுத் தம்உயிரைச் சர்வேசுரனின் திருக்கரங்களில் ஒப்படைத்தார்.

இந்தச் செபமாலையைத்தான் இருவர் எடுத்துக்கொண்டு தெருவழியே பிறர்நகைக்குமாறுசப்தமாய், "எனக்குச் சொந்தமெடா இது" என்று

சொல்லி வாக்குவாதம் செய்துகொண்டிருந்தனர். இவ்வழக்கில் மேற்சொன்ன இருவரில் பதிதன் செயமடையவே செபமாலை அவனுக்குச் சொந்தமாயிற்று. இப்போ அந்தச் செபமாலையின்பலன் அந்தோ! பெரியதோர் மாற்றம்! இப்பதிதன் இதை அடைந்தநாள்முதல் அவன் இதயத்தில் ஒருவித ஞானஉணர்ச்சி குடிகொண்டது. இது எப்படிஎனக்குக் கிடைத்தது? இதனால் எனக்கு என்ன பயன்?...... என்றெல்லாம் பலகேள்விகள் அவன் மனதிலே தோன்றின. ஒருகத்தோலிக்க குருவானவரிடம் இதைவெளியிட்டு உண்மைவிசுவாசத்தை உணர்ந்து, ஞானத்தீட்சைபெற்று, உத்தமகத்தோலிக்கனானான். அன்றுமுதல் தேவதாயிடமும், அவளதுமாலையிடமும் விசேஷஅன்பு பாராட்டினான் என்று கூறவும்வேண்டுமா?

தி. இ. தா.

---

மாசற்ற இருதயமும்

## மரியாயின் சேனையும்

யைப் பரப்புவதும் உலக இரட்சணியத்திற்கு அவசியம். ஓர்முறை தேவதாயார் தமது இருதயம் ஒளிவீசியபடி இருக்கவும், அதன்அருகில் திருக்குமாரன் ஓர்வெண்முகிலின்மேல் உட்கார்ந்துகொண்டு முட்களால் குத்துண்டுஇருக்கும் தாயாரின் இருதயத்தைத் தமது விரலினால் காட்டியபடியே யிருக்கவும், தமதுதாயின் மாசில்லாதஇருதயத்துக்கு நிந்தைப் பரிகாரம் செய்யவேண்டும் என்னுங் குறிப்பாக அது தோன்றவும் லூசியா தரிசனத்தில் கண்டார். இந்த அப்போஸ்தலிக்க தொண்டை நிறைவேற்றி உலகத்தை ஈடேற்றும் இச்சேவை தற்போது மரியாயின்சேனையிலே பெரும்பங்கு தங்கியிருக்கிறது.

இவ்விதசேனை அங்கத்தவர் தங்கள் கடமைகளை இன்னும் பூரணமாக நிறைவேற்றவும், சேனையின்பால் சகலருள்ளங்களிலும் நல்லபிப்பிராயம்வளரவும், சேனைச்சேவையால் உலகு அதிக நன்மையடையவும் மாசற்ற இருதயநாயகி அருள்பாலிப்பாராக.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

**இல. M. B. 2389**

மானிப்பாய்
சிவக்கொழுந்து இராசேந்திரன்
— வழக்காளி.

எதிராக

நாவாந்துறை
1. அந்தோனிமுத்து பத்தினுதரும்
2. பெண் உத்தரியம்
3. அந்தோனிமுத்து அருளப்புவும்
4. பெண் விக்ரோறியா
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B. 2389-ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணியை 1959-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12-ம் திகதி சனிக்கிழமை மு. ப. 10 மணிக்கு அந்தந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 700. அதற்கு 11-8-58 தொடக்கம் இறுபடும்வரையும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 160.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணார்பண்ணை மேற்கிறை தற்போது தென்மேற்கிறை பராயடி ப. நி. இ. எட்டில்மூன்று ($\frac{3}{8}$) எல்லை: கிழக்கு—ரேட்டு. வடக்கு—பிலிப்பு சந்தியாப்பிள்ளைக்கும், பெண்சாதிக்கும் உரிய ஆதனம். மேற்கு—விக்ரோறியாவுக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு—சூசை கைம்பெண் தங்கம்மாவின் ஆதனம். இதடங்கலில் சொரியலாய் அரைவாசி.

2. ஷை இறை பராயடி ப. நி. இ. எட்டில் மூன்று. எல்லை: கிழக்கு—ரேட்டு. வடக்கு—பிலிப்பு சந்தியாப்பிள்ளைக்கும், பெண்சாதிக்கும் உரிய ஆதனம். மேற்கு—விக்ரோறியாவுக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு—சூசை கைம்பெண் தங்கம்மாவின் ஆதனம். இதடங்கலில் சொரியலாய அரைவாசி.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

35, 4 ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 27-7-59

---



**Jaffna Municipal Council**
**Assessment Tax. 2nd Qr., 1959.**

Rates for 2nd Quarter 1959 should be paid in the Municipal Office before 12 Noon on Saturday the 5th of September, 1959.

All payments thereafter will be subject to an additional levy of 10% as warrant costs.

Remittances by Cheques, Money Orders or Postal Orders should be in favour of the Municipal Commissioner, Jaffna. Particulars i.e. premises numbers name of Street and the Ward etc. should accompany all such remittances.

**Hudson Selvarajah,**
for Municipal Commissioner,
Jaffna.

Municipal Office,
22nd July 1959.



---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1420**

காரைநகர் வடக்கு
தம்பு ராசரெட்டினம் மனைவி மகேஸ்வரி
— வழக்காளி.

எதிராக

1. செயிட் சுள்ரான் அப்துள்காதர் மொகமட் மொகிடீன் தையல்காரர், 22, 24 ராவ்ஸ் ரேட், பெரியகடை.
2. மூக்கன் உம்மா
3. சேயிட் சுள்ரான் அப்துள்காதர் கைம்பெண் சேகுமொகிடீன நாச்சியா

எல்லோரும் வண்ணார்பண்ணை மேற்கு.
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 1420-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1959-ம்ஆ புரட்டாதி மீ 21-உ திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2188. இன்னும் ரூபா 1500-க்கு 3-1-57 தொடக்கம் 26-2-57 வரையும் 100-க்கு (12%) பன்னிரெண்டுவீத வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100-க்கு (5%) ஐந்துவீதவட்டியும், கோட்டுச்செலவு ரூ.206-97 இதில் ரூபா 600 கொடுபட்டது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை மேற்கு இறை "புங்கடி" பர. நில. குளி 11-உம் $\frac{5}{8}$ உம், புதுவீடும், செய்பயிரும். எல்லை: கிழக்கு—செகு மொகமெட் பெண் மொகமெட் கனியாவும், பங்காளரும். வடக்கு—மொகமெட் அப்துள்காதர் பெண் சுள்ரான் மொகிடீன் நாச்சியா. மேற்கு—ரேட்டு. தெற்கு—சேயிட் சுள்ரான் அப்துள்காதர் மொகிடீன் கண்டு.

இ. கனகரத்தினம்
கொமிஷனர்

28-7-59

---

### நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் திருவிருதய இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் பேருதவியினாலும் யான் கேட்ட உதவியைப் பெற்றுக்கொண்டேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கத் தாமதித்தமைக்கு மிக மனம்வருந்தி மன்னிப்புக் கோருகிறேன்.

தேவதாயின் அடியார்.

---

# கல்கத்தாநகரின் தருமசீமாட்டி...

[முதலாம் பக்கத் தொடர்ச்சி]

மறைப்பதற்குப் போர்வை, குடிக்கச் சுத்தமானதண்ணீர், உணவு ஆதியன அங்கே இலவசமாக வழங்கப்படும். இந்தச்சாதாரண தேவைகளைவிட இடம்பமானதோ, அநவசியமானதோ ஒன்றும் அங்குகிடையாது.

கல்கத்தாவின் கானலைத்தணித்துச் சாந்திசெய்ய அந்தவிடுதியிலே மின்சாரவிசிறிகள் உண்டு. உள்ளக்குமுறலைத் தீர்த்துச் சாந்தியளிக்க—கவலைபோக்க அங்கே கருணைஉள்ளம்கொண்ட கன்னியாஸ்திரிகள் உண்டு. அந்திமவேளையிலே தன்னைக்கவனிக்கும்ஆத்மா உலகில் உண்டு என்ற ஒரேஆறுதல் அங்குவரும் அபலைகளுக்குக் கிடைக்கின்றது. இந்தத்திருப்தியில் அவர்கள் நிம்மதியாகஉயிர்விடுகின்றார்கள்.

கல்கத்தாவில் சங். தெரேசா தாயார்அவர்களை அறியாதஏழைகள் ஒருவருமில்லை. ஏழைகளின் பங்காளியாக ஏழைகள்மத்தியிலே சேவைசெய்ய வேண்டுமென்று தன்னைஅர்ப்பணித்த நாள்முதல் அனாதரவானஏழைகள்—திக்கற்ற திரஸ்கரிக்கப்பட்ட குழந்தைகள், குஷ்டரோகிகள் அனைவரதுஉள்ளங்களையும் கவர்ந்துவிட்டார் இந்தப் புண்ணியவதி. 60இலட்சம்மக்கள்வதியும் கல்கத்தாவிலே—அதுவும் பிரசித்திவாய்ந்த ஒரு துறைமுகப்பட்டணத்திலே, "சிஸ்றர்தெரேசா, கல்கத்தா" என்றுமாத்திரம் விலாசமிட்டுத் தபால்போட்டாலே போதும். அது நிச்சயம் அவருக்குக்கிடைத்துவிடுமானால் தாயார்அவர்களின் பிரஸ்தாபமும், பெருமையும்தான் என்னே!

30ஆண்டுகளுக்குமுன் அல்பானியாவிலே பிரபலசெல்வக்குடும்பமொன்றில் உதித்த இம்மாது சிரோமணி லொறேத்தோ கன்னியர்சபையில்சேர்ந்தார். நாளடைவிலே அந்தமடத்திலிருந்துகொண்டே கல்கத்தாவீதிகளில் கண்ட கோரக்காட்சிகள், ஏழைகளின்அவஸ்தைகள், நிர்ஆதரவற்றவர்கள்படும் அவலங்கள் எல்லாம் அவரின் உள்ளத்தை உறுத்தியது. ஏழைகளுக்கு—அநாதைகளுக்கு—வீதிகளில் நலியும் மனிதசிவன்களுக்குத் தொண்டுசெய்யவேண்டும்; அவர்கள்வாழ்க்கையிலே உயிர்ப்புக் காணவேண்டும்; அவர்கள்வாழ்விலே ஒளிகாட்டவேண்டும் என்று துடித்தார். தனதுசிரேஷ்டர்களிடம் உத்தரவுகோரினார். அது கிடைத்தது. தானே ஒரு புதியசபையை ஏற்படுத்தினார். "அதுவே பிறர்சிநேககன்னியர் சபை." இந்தச்சபையிலே இன்று 85கன்னியாஸ்திரிகள் இருக்கிறார்கள். அவர்களில்மூவர் தராதரம் பெற்ற (டக்றர்கள்) வைத்தியர்கள். அவர்களில்ஒருவர் இந்தியர், ஒருவர் யூகோசிலாவியர், மற்றொருவர் ஒருஆங்கிலேயர். டக்றர் மேரியங் அண்மையிலேயே இச்சபையில் சேர்ந்தவராவர். மற்றையோர்யாவரும் இந்தியர்களே.

இந்தத் தருமகன்னியாஸ்திரிகளின்சேவைகள் நான்குபிரிவினவாகும். உயிர்பிரியும் தருவாயில் இருப்பாரை — குற்றுயிராய்த் தெருவோரங்களில்கிடந்து அவலமாய்ச்சாகும் வறிஞரை — ஆதரவற்றுச் சேரிகளிலும், சாக்கடைகளிலும் வருந்துவோரைஎடுத்துவந்து பராமரித்துத் தேற்றுவதுஒன்று. அனாதைகளான — திரஸ்கரிக்கப்பட்ட — தாய்மாராலே வீதிகளில் புறக்கணித்துவிடப்பட்ட குழந்தைகளை — சிறுவர்களைத் தாபரிப்பதுஇன்னொன்று. அடுத்தது, நடமாடும் வைத்தியசாலையைக் கொண்டியக்குவது. இந்தமோட்டார்ரதம்—அதாவது வைத்திய உபகரணங்கள், மருந்துகள்யாவும் கொண்ட மோட்டார்ரதம் — கல்கத்தாநகரமெங்கும்சென்று அங்குள்ள 1,000பேருக்கு மேற்பட்ட குஷ்டரோகிகளுக்குச் சிகிச்சையளித்துவருகின்றது. நான்காவது, வெளிநோயாளர்வைத்தியசாலை. இங்கு வருடமொன்றுக்கு 64,000நோயாளிகளுக்கு இலவசவைத்திய சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

சங். தாயார்தெரேசாவின் இப்பரோபகார சேவைகளுக்கு அரசினரும் ஆதரவளித்துவருகின்றனர். இருந்தும் கர்ப்பத்தடை, குடும்பக்கட்டுப்பாடுஎன்னும் அரசினரின்கொள்கைகள் மட்டிலே தாயார் நேர்விரோதமானவர். இவ்விஷயத்திலே பெரியமுரண்பாடு அவருக்கு உண்டு. அரசினரின் இந்தஅபத்தப்போக்கை அவர்எதிர்த்துப் போராடிவருகிறார். மேலும் இவ்வியக்கத்துக்குமாறாகத் தானே ஒருபுனிதஇயக்கத்தை ஆரம்பித்துள்ளார். "புனிதகுடும்பஇயக்கம்" மிகவும்தீவிரமாகப் பரப்பப்பட்டு வருகிறது. இந்தஇயக்கம் பிள்ளைப்பேற்றின் பெருமையையும், பிள்ளைவளர்ப்பைப்பற்றியும் அறிவுறுத்தி மக்களைஉற்சாகப்படுத்தி வருகிறது.

நோயாளரின்சேவையையே இலட்சியமாய்க்கொண்டு பணியாற்றிவரும் இந்தக்கன்னியாஸ்திரிகளின் எளியவாழ்வு மக்கள் மனதை உறுத்துகிறது. மிகவும் எளிமையான உடைகளையே இவர்கள் உடுத்துகிறார்கள். நோயாளருக்கு அளித்தபின் மீதியாயிருக்கும்உணவுகள் வீதிகளிலே தங்கள் இடுப்புகளிலே தளதளத்து மெலிந்து அழுதுகொண்டிருக்கும் பிள்ளைகளுடன் வயிற்றுப்பசியால் வாடித்தவிக்கும் தாய்மாருக்குத் தானஞ்செய்யப் படுகின்றன. இப்படியே சங். தெரேசாதாயாரின் பிறர்சிநேகசபைக் கன்னியாஸ்திரிகள் செய்துவரும் மகத்தானசேவைகள் சொல்லுந்தரமன்று.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 30-1959.